# நகரத்தார்கள் திருப்பணி செய்த சிவன் கோயில்கள்

## I. நகரக்கோயில்கள்

| தலங்கள் | இறைவன் - இறைவியின் பெயர் | ஆண்டு |
|---|---|---|
| மாத்தூர்க்கோவில் | ஐந்நூற்றீசர் - பெரியநாயகி | 1500 ஆண்டு தொன்மை மிக்கது |
| இளையாத்தன்குடி கோயில் | கைலாசநாதர் - நித்தியகல்யாணி | கி.பி.707 |
| வைரவன் கோயில் | வளரொளிநாதர் - வடிவுடையம்மை | கி.பி.712 |
| பிள்ளையார்பட்டிக்கோவில் | திருவீசர், மருதீசர் - சிவகாமவல்லி, வாடாமலர் மங்கை | கி.பி.714 |
| இரணியூர்க்கோயில் | ஆட்கொண்டநாதர் - சிவபுரந்தேவி | கி.பி.714 |
| இலுப்பைக்குடிக்கோயில் | தான்தோன்றியீசர் - சவுந்தரநாயகி | கி.பி.714 |
| நேமம் கோவில் | செயங்கொண்டசோழீசுவரர் - சவுந்தரநாயகி | கி.பி.714 |
| சூரைக்குடிகோயில் | தேசிகநாதர் - ஆவுடைநாயகி | கி.பி.718 |
| வேலன்குடிக்கோவில் | கண்டீசுவரர் - காமாட்சியம்மை | கி.பி.718 |

## II. சொந்த ஊரில் நிறுவிய கோயில்கள்

**10. அமராவதிபுதூர் - வந்தருளீசுவரர் - வாழவந்தநாயகி**

இக்கோவில் வயி.ராம.வயி. வயிநாகரம் குடும்பத்தாரால் ரூ.90,000 செலவில் புதுப்பிக்கப்பட்டு 26.6.1908ல் கும்பாபிஷேகம் செய்யப் பெற்றது. 1940ல் இரண்டாவது கும்பாபிஷேகம் நடைபெற்றது.

**11. அரண்மனைச்சிறுவயல் - மும்முடீசுவரர் - கருணாகடாட்சி அம்மன்**

இவ்வூர் நகரத்தார்கள் பொதுவில், ரூ.7,000 செலவில் திருப்பணியும், 1780 மற்றும் 1948ல் இரு கும்பாபிஷேகங்களும் நடைபெற்றுள்ளன. ரூ.5.000 செலவில் பெருமாள் கோயில் திருப்பணியும் செய்யப் பெற்றுள்ளது.

**12. அரிமழம் - சுந்தரேசர் - மீனாட்சியம்மை**

இக்கோயிலுக்கு கட்டையன் செட்டியார் குடும்பத்தார்கள் போதுமான இடம் வழங்கினார்கள். ரூ.5,00,000 செலவில் திருப்பணி செய்து 1870ல் முதற் கும்பாபிஷேகமும், 1903, 1944, 1958, 1975, 1991, 2005 ஆகிய ஆண்டுகளில் குடமுழுக்கு விழாக்களும் நடைபெற்றது.

**13. அரியக்குடி - இரத்தினபுரீசா் - சுந்தரபரமேச்சுவரி**

இவ்வூா் நகரத்தாா்களால் ரூ.30,000 செலவில் திருப்பணியும், 15.9.1924 கும்பாபிஷேகமும் செய்யப்பெற்றது. பின் கானாடுகாத்தான் க.வெ.சிதம்பரம் செட்டியாா் முயற்சியால் உட்பிரகாரமும் மண்டபமும், வெளித்திருமதிலும், இராசகோபுரமும் ரூ.4,00,000 செலவில் திருப்பணியும் 10.6.1818ல் முதல் கும்பாபிஷேகமும், ரூ.5,00,000 செலவில் திருப்பணி செய்து 21.4.1902ல் இரண்டாவது கும்பாபிஷேகமும் நடைபெற்றது. சிவன் கோயில் குடமுழுக்கும் 1996ல் நடைபெற்றது. பெருமாள் கோயிலுக்கு 1,32,000 செலவில் பல வாகனங்களும், 1,42,000 செலவில் திருவாபரணங்களும் செய்யப்பட்டது. 2,89,000 மதிப்புடைய நிலங்கள் உள்ளன. சிவன் கோயில் குடமுழுக்கும் 1996ல் நடைபெற்றது.

**14. அலவாக்கோட்டை - சொக்கலிங்கமூா்த்தி – மீனாட்சியம்மை**

சி.அரு. சின்னான் செட்டியாா் ரூ.45,000 செலவில் சிவன் கோயிலுக்கு திருப்பணி செய்தாா். 4.9.1924ல் கும்பாபிஷேகம் நடைபெற்றது. 1927, 1950, 1982 ஆண்டுகளில் குடநீராட்டு நடந்துள்ளது. பி.நா.குடும்பத்தினா் ரூ.1,10,000 செலவில் சீனிவாசப் பெருமாளுக்கு திருப்பணியும், 1909ல் முதற் கும்பாபிஷேகமும், 9.2.1941ல் இரண்டாவது கும்பாபிஷேகமும் செய்துள்ளனா். 6.3.2009ல் குடமுழுக்கு நடைபெற்றுள்ளது.

**15. கானாடுகாத்தான் - சிவலோகநாதா் - ஒப்பிலாம்பிகை**

இவ்வூா் நகரத்தாா்களால் ரூ.50,000 செலவில் சிதம்பரமூா்த்தி விநாயகா் கோயில் திருப்பணி செய்யப்பட்டுள்ளது. க.வெ.ராம. வெங்கடாசலம் செட்டியாரின் முயற்சியில் பெரிய கோயிலில் உள்ள ஒப்பிலாம்பிகை உடனாய கைலாசநாதா், கோயில் திருப்பணியைக் கானாடு காத்தான் மற்றும் நேமத்தான் பட்டி நகரத்தாா்கள் ரூ.10,00,000 செலவில் 30.4.1931ல் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. சா.ராம.மு.அ. அண்ணாமலைச் செட்டியாரால் ரூ.1,00,000 செலவில் செட்டிநாடு மீனாட்சியம்பிகை கோயில் திருப்பணி செய்து 1951ல் கும்பாபிஷேகம் நடைபெற்றது.

**16. ஆத்தங்குடி - சுந்தரேசுவரா் - மீனாட்சியம்மை**

இவ்வூா் நகரத்தாா்களால் ரூ.10,00,000 செலவில் திருப்பணியும், 26.4.1928ல் கும்பாபிஷேகமும், ரூ.70,000 செலவில் இராசகோபுரம் திருப்பணியும், 5.5.1933ல் கும்பாபிஷேகமும் செய்யப் பெற்றன. மூன்றாவது கும்பாபிஷேகம் 1992ல் நடைபெற்றது. 2006ல் குடமுழுக்கு நடைபெற்றுள்ளது.

**17. அத்திக்காடுதெற்கூர் - சுந்தரேசுவரர் - மீனாட்சியம்மை**

இவ்வூர் நகரத்தார்களால் ரூ.3,00,000 செலவில் சிவாலயத் திருப்பணியும், 1941 மற்றும் 1971, 1982, 1996லும் கும்பாபிஷேகம் செய்தனர்.

**18. ஆவினிப்பட்டி - சுந்தரேசுவரர் - மீனாட்சியம்மை**

இவ்வூர் நகரத்தார்களால் ரூ,15,000க்கு சிவாலயத்துக்குப் பாலாலயம் செய்து 1909ல் குடமுழுக்கு செய்தனர். 1997லும் குடமுழுக்கு நடைபெற்றது.

**19. உ.சிறுவயல் - ஐராவதீச்சுரர் - சவுந்தரநாயகி**

சா.ராம. பழநியப்ப செட்டியார் குடும்பத்தினரால் ரூ.1,50,000 செலவில் திருப்பணியும் செய்து, 16.5.1861, 1867, 1911, 1921, 28.6.1926, 1942, 1960, 18.6.2009 கும்பாபிஷேங்களும் செய்யப்பெற்றன. இவ்வூர் நகரத்தார்கள் பொதுக்கோவில் - பொன்னழகியம்மன் கோவில். இக்கோயில் குடமுழுக்கு 1820, 1913, 1934, 1960, 1978, 1993, 2005 ஆகிய ஆண்டுகளில் குடமுழுக்கு நடந்தது.

**20. உலகம்பட்டி - உலகநாதர் - உலகநாயகி**

இவ்வூர் நகரத்தார்களால் ரூ.90,000 செலவில் திருப்பணியும், 16.1.1929ல் கும்பாபிஷேகமும் செய்யப் பெற்றது. 30.8.1959, 30.8.1976, 28.1.1991, 31.10.2003 ஆகிய நாள்களில் கும்பாபிஷேகங்கள் நடந்துள்ளன.

**21. கடியாபட்டி - பூமீசுவரர் - பிரமவித்யாநாயகி**

இவ்வூர் நகரத்தார்களால் ரூ.4,00,000 செலவில் திருப்பணி செய்து வெள்ளி வாகனங்கள், நவரத்தின ஆபரணங்கள் செய்து 17.8.1893ல் கும்பாபிஷேகம் செய்தனர். பின் 1934, 1945, 1963, 1978, 1997 ஆகிய ஆண்டுகளில் குடமுழுக்கு நடைபெற்றது.

**22. கண்டரமாணிக்கம் - கைலாசநாதர் - ஏலவார்குழலி**

இவ்வூர் நகரத்தார்களால் ரூ.50,000 செலவில் திருப்பணி செய்தனர். 1835, 1976ம் ஆண்டுகளில் நன்னீராட்டு விழா நடந்துள்ளது.

**23. கண்டவராயன்பட்டி - சுந்தரேசுவரர் - மீனாட்சியம்மை**

இவ்வூர் நகரத்தார்களால் ரூ.10,000 செலவில் திருப்பணி செய்தனர். 1904ல் கும்பாபிஷேகம் நடைபெற்றது. 1922, 1948, 1972, 1991, 2003 ஆகிய ஆண்டுகளில் திருக்குட நன்னீராட்டு விழா நடந்துள்ளது. 2003ல் பெருமாள் கோயிலும், சிவன் கோயிலுக்குள் கட்டப் பெற்றுள்ளது.

**24. கண்டனூர் - சுந்தரேசுவரர் - மீனாட்சியம்மை**

இவ்வூர் நகரத்தார்களால் ரூ.8,00,000 செலவில் திருப்பணி செய்தனர். 7.2.1892, 23.51928, 29.1.1934, 7.6.1937 ஆகிய நாட்களில் கும்பாபிஷேகம் நடைபெற்றன.

1952, 1978, 1992, 2006 ஆகிய ஆண்டுகளில் குடமுழுக்கு நடந்துள்ளது. சி.நெ.வீர.குடும்பத்தாரால் ரூ.4,00,000 செலவில் பெருமாள் கோயில் திருப்பணி செய்து கும்பாபிஷேகம் செய்தனர்.

**25. கல்லல் - சோமசுந்தரர் - சவுந்தரநாயகி**

மெ.ராம.வெள்ளையப்பய்யா அவர்களால் ரூ.40,000 செலவில் திருப்பணி செய்யப்பட்டது. 12.6.1863ல் கும்பாபிஷேகம் நடைபெற்றது. மெ.ராம.வெ., ஆ.மு., கரு.பெரி, பெரி.சுப., ராம.மு.ராம.இராமன் செட்டியார் முதலியோர் ரூ.8,00,000 திருப்பணி செய்து 2.1.1917லிலும் 2002லும் கும்பாபிஷேகம் செய்தனர்.

**26. க. அழகபுரி**

சிவன் கோயில் இல்லை. நகரத்தாருக்குப் பொதுவாக இவ்வூரில் அழகு விநாயகர் கோயில் அமைந்துள்ளது. சிவகங்கை அரசகுடும்ப அறநிலையத்திற்குச் சொந்தமான அழகிய நாச்சியம்மன் கோயிலும் இவ்வூரில் உள்ளது. இவ்வூரில் அருளட்சி செய்கின்ற அழகிய நாச்சியம்மன் பெயராலேயே இவ்வூர் அழகாபுரி என அழைக்கப்படுகிறது.

**27. கொ.அழகாபுரி**

இவ்வூர் நகரத்தார்களால் பொதுவில், ரூ.45,000 செலவில் விநாயகர் கோயில் திருப்பணியும், 9.6.1927ல் கும்பாபிஷேகம் செய்யப் பெற்றன.

**28. ஒக்கூர்**

சிவன் கோயில் இல்லை. நகரத்தாருக்குப் பொதுவான சசிவர்ண விநாயகர் கோயில் உள்ளது. இவ்வூர் சி.கரு.சி., சி.கரு.ஆ. இவ்விரண்டு குடும்பத்தினரும், சோழபுரத்திலும், காளையார்கோயிலிலும், பாதாளேசுவரத்திலும், ஸ்ரீ வில்லிப்புத்தூரிலும் இலட்சக் கணக்கில் திருப்பணி செய்திருத்தலால் இவ்வூரில் வேறு சிவாலயம் நிறுவப்படவில்லை. ஏழைகாத்த அம்மன் கோயில் ஒன்றும், ஐயனார் கோயில் ஒன்றும் உள்ளன.

**29. கருங்குளம் - சொக்கநாதர் - மீனாட்சியம்மை**

இவ்வூரில் நகரத்தார் செல்வ விநாயகர் ஆலயத் திருப்பணி செய்துள்ளனர்.

**30. கல்லுப்பட்டி - கைலாசநாதர் - நித்தியகல்யாணி**

இவ்வூர் நகரத்தார்களால் ரூ.50,000 செலவில் ஆரம்பத்தில் திருப்பணியும், கும்பாபிஷேகமும் செய்யப்பெற்றன. மீண்டும் 2000-ல் குடமுழுக்கு நடைபெற்றது.

**31. காரைக்குடி - மீனாட்சி – சுந்தரேசுவரர்**

இவ்வூர் நகரத்தார்களால் ரூ.5,00,000 செலவில் திருப்பணியும், 21.4.1872லும், 1888, 1953, 1974, 1989, 2002 ஆகிய ஆண்டுகளிலும் கும்பாபிஷேகமும், திருவாபரணம், வாகனங்கள் ரூ.1,00,000 பலராலும் செய்யப்பெற்றுள்ளன. ராய.நாகப்ப செட்டியாரால், நாகநாதபுரம் புதூரில் பெருமாள் கோயில் இணைந்த சிவன் கோயில் திருப்பணிகளும், பசுமடம், நந்தவனம், ஊருணி, விடுதி முதலியனவும், ரூ.2,00,000 செலவில் அமைக்கப் பெற்றது. 1833ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது. பொய் சொல்லா மெய்யர் ஐயனார் கோயிலுக்கு நகரத்தார்களால் ரூ.2,00,000 செலவில் திருப்பணி செய்யப்பட்டது.

**32. காளையார்மங்கலம் - சுந்தரேசவரர் - மீனாட்சியம்மை**

இவ்வூர் நகரத்தார்களால் ரூ.20,000 செலவில் சிவாலயத் திருப்பணியும், 6.6.1920ல் ரூ.5,000 செலவில் கும்பாபிஷேகமும் செய்யப் பெற்றது. பின் 1994ல் கும்பாபிஷேகம் நடந்துள்ளது.

**33. கீழச்சிவற்பட்டி பி.அழகாபுரி - சுந்தரேசுவரர் - மீனாட்சியம்மை**

இவ்வூர் நகரத்தார்களால் ரூ.10,00,000 செலவில் சிவாலயத் திருப்பணி செய்து, 24.10.1910ல் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. மேலும் 21.10.1877, 24.10.1910, 20.4.1970, 8.9.1994, 2008 ஆகிய ஆண்டுகளில் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. வெ.கரு.க.கருப்பன் செட்டியார் மற்றும் பலர் பொருளுதவி கொண்டு ரூ.1,00,000 செலவில் கூடலழகிய பெருமாள் கோயில் திருப்பணி செய்து 21.4.1915ல் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது.

**34. குருவிக்கொண்டான்பட்டி - சொக்கலிங்கம் - மீனாட்சியம்மை**

இவ்வூர் நகரத்தார்களால் ரூ.4,30,000 செலவில் திருப்பணி செய்து, 11.2.1932ல் கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது. 10.2.2006ல் கும்பாபிஷேகம் நடைபெற்றது. கீரணிப்பட்டி முத்துமாரியம்மன் கோயில் சித்திரை திருவிழா புகழ்பெற்ற பெரிய திருவிழா,

**35. குழிபிறை - சொக்கலிங்கஈஸ்வரர் - மீனாட்சியம்மை**

இவ்வூர் நகரத்தார்களால் ரூ.3,00,000 செலவில் திருப்பணியும், 12.6.1905 மற்றும் 1976, 1994, 2007ஆம் ஆண்டுகளில் கும்பாபிஷேகம் செய்யப்பெற்றன.

**36. கொத்தமங்கலம் - மாங்காட்டீசர் - சவுந்தரநாயகி**

இவ்வூர் நகரத்தார்களால் ரூ.3,00,000 செலவில் திருப்பணியும், 29.8.1909ல் முதற் கும்பாபிஷேகமும், 28.4.1926ல் இரண்டாவது கும்பாபிஷேகமும் விரோதி ஆண்டு ஆவணி மாதம் 20ம் தேதி மூன்றாம் கும்பாபிஷேகமும் நடைபெற்றது. 27.8.2008ல் குடமுழுக்கு நடந்துள்ளது. புதுக்கோட்டை அரச குடும்பத்திற்குரிய ஆவுடை நாயகி, திருவீசர் கோயிலுக்கு மாத்தூர் அரும்பாக்கள் நகரத்தார்

பொதுவில் ரூ.2,00,000 செலவில் திருப்பணியும் 1930ல் குடமுழுக்கும் நடைபெற்றது.

**37. கொப்பனாபட்டி - விசுவேசுவரர் - விசாலாட்சி**

இவ்வூர் நகரத்தார்களால் ரூ.1,00,000 செலவில் கொன்னையூர் முத்துமாரியம்மை கோயில் திருப்பணி செய்து, 17.8.1934ல் கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது. நகரப் பொதுவான முத்து விநாயகர் கோயில் இது சிவன் கோயிலாகவும் உள்ளது. 1934லிலும் பின்னர் 1955லும் 1985லும் 2004லிலும் கும்பாபிஷேகங்கள் நடைபெற்றுள்ளன.

**38. கோட்டையூர் - சொக்கலிங்கம் - மீனாட்சியம்மை**

இவ்வூர் நகரத்தார்களால் ரூ.18,00,000 செலவில் திருப்பணியும், 1870, 21.1.1940திலும் இரு கும்பாபிஷேகம் நடைபெற்றது. 1962, 1980, 1996, 2008 ஆகிய ஆண்டுகளில் கும்பாபிஷேகம் நடைபெற்றது.

**39. கோனாபட்டு - சுந்தரேசுவரர் - மீனாட்சியம்மை**

இவ்வூர் நகரத்தார்களால் ரூ.1,00,000 செலவில் திருப்பணியும், 17.5.1888, 2.8.1898, 10.7.1916, 30.4.1931யிலும் முறையே நான்கு கும்பாபிஷேகம் நடைபெற்றது. ராஜகோபுரம் கட்டப்பட்டு பின் ஐந்தாவது கும்பாபிஷேகம் நடைபெற்றது. 2004லும் குடமுழுக்கு நடைபெற்றது.

**40. சண்முகநாதபுரம் (ஆராவயல்)- சுந்தரேசுவரர் - மீனாட்சியம்மை**

இவ்வூர் நகரத்தார்களால் ரூ.10,000 செலவில் திருப்பணியும், மே மாதம் 1879ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. இதற்குப் பிறகு பல கும்பாபிஷேகங்கள் நடைபெற்றுள்ளன. 1989லும், 2006லும் குடமுழுக்கு நடைபெற்றது.

**41. சிராவயல் - தியாகராஜர் - திரிகோணநாயகி**

க.மு.நா. மெய்யப்ப செட்டியார், பெரி.மு. முத்தையா செட்டியார் இருவரின் முயற்சியால் 13.6.1909ல் பாலாலயப் பிரதிட்டை செய்யப்பெற்று, பின் ரூ.50,000 செலவில் திருப்பணியும், 1.1.1912ல் கும்பாபிஷேகமும் செய்யப்பெற்றது. 17.8.1927ல் முதல் நகரத்தார்களிடம் ஒப்புவிக்கப் பெற்று நடைபெற்று வருகின்றது. 1927, 1960, 1979, 1988 ஆகிய ஆண்டுகளில் குடமுழுக்கு விழா நடந்துள்ளது.

**42. சக்கந்தி - சுந்தரேசுவரர் - மீனாட்சியம்மை**

உல.க.கண. சோமசுந்தரம் செட்டியார் 4.10.1936ல் விநாயகர் ஆலயத்தைப் புதிதாகக் கல்திருப்பணி செய்தும், ரூ.20,000 செலவில் சிவாலயத்தைக் கட்டி முடித்தும் 28.10.1938ல் கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது.

**43. சிறுகூடற்பட்டி - சுந்தரேசுவரா் - மீனாட்சியம்மை**

இவ்வூா் நகரத்தாா்கள் ரூ.30,000 செலவில் திருப்பணியும், 1895ல் கும்பாபிஷேகமும் நடைபெற்றது.

**44. செம்பனூா் - கண்டீசுவரா் - நித்தியகல்யாணி**

கு.ம.நா. நாச்சியப்ப செட்டியாா், அவா் தம்பி சுப்பிரமணியன் செட்டியாா் இருவராலும் 1899ல் ரூ.35,000 செலவில் திருப்பணி செய்யப்பட்டு 27.4.1902ல் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. நகரத்தாராலும், தேவகோட்டை மெ.லெ.மெ.இராமநாதன் செட்டியாரால் ஏப்ரல் 1917ம் ஆண்டு சுந்தரராஜப் பெருமாள் கோயில் திருப்பணி செய்து ரூ.5,000 செலவில் சுற்றுத் திருமதில், கோயில் கட்டி முடிக்கப்பட்டது.

**45. செவ்வூா் - சொக்கலிங்கம் - மீனாட்சியம்மை**

நகரத்தாா்களாலும், செ.ராம. சொக்கலிங்கம் செட்டியாராலும் ரூ.1,00,000 செலவில் திருப்பணி செய்தும், 21.4.1932ல் ரூ.15,000 செலவில் நகரத்தாா்களால் கும்பாபிஷேகமும் செய்யப் பெற்றன. பின் 31.5.1964, 11.11.1984, 3.6.2001லும் கும்பாபிஷேகம் நடைபெற்றது.

**46. சொக்கநாதபுரம் - திருக்கண்டீசுவரா் - சிறுதேன்மொழியம்மை**

இவ்வூா் நகரத்தாா்களால் ரூ.1,00,000 செலவில் திருப்பணியும், 26.6.1910ல் கும்பாபிஷேகமும் செய்தனா்.

**47. சொக்கலிங்கபுரம் (மதகுபட்டி)- சொக்கலிங்கம் - மீனாட்சியம்மை**

இவ்வூா் நகரத்தாா்களால் ரூ.2,50,000 செலவில் திருப்பணியும், 8.12.1935 மற்றும் 1995ல் கும்பாபிஷேகமும் செய்யப்பட்டது. 2008ல் குடமுழுக்கு செய்யப்பெற்றுள்ளது.

**48. சொக்கலிங்கம்புதூா் (சொக்கனேந்தல்)- சுந்தரேசுவரா் - மீனாட்சியம்மை**

இவ்வூா் நகரத்தாா்களால் ரூ.70,000 செலவில் திருப்பணியும், 20.6.1918ல் கும்பாபிஷேகமும் செய்யப்பெற்றது. நகரத்தாா்களால் ரூ.18,000 செலவில் ஊருணியும், பிள்ளையாா் கோவிலும் கட்டப்பட்டு 20.6.1918ல் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. சிவன் கோயில் 24.6.1999ல் குடமுழுக்கும் நடைபெற்றது.

**49. தேவகோட்டை - சுந்தரேசுவரா் - மீனாட்சியம்மை**

இவ்வூா் நகரத்தாா்களால் ரூ.7,00,000 செலவில் திருப்பணியும், 4.6.1888, 4.8.1925 இந்நாளில் இரண்டு கும்பாபிஷேகம், 10.2.1989ல் குடமுழுக்கு விழாவும் நடைபெற்றது.

**50. தேனிபட்டி - அகத்தீசுவரா் - அகிலாண்டேசுவரி**

இரணியூர், இளையாத்தங்குடி, சூரக்குடி, வைரவன்பட்டி ஆகிய கோயிலைச் சேர்ந்தவர்கள் ரூ.80,000 செலவில் திருப்பணியும், 1939, 1971ல் கும்பாபிஷேகமும் நடத்தி வைத்தனர்.

**51. நடராஜபுரம் - இராமநாதர் - பருவதவர்த்தனி**

இவ்வூர் நகரத்தார்களால் ரூ.15,000 செலவிட்டு சூம 1921ல் திருப்பணி தொடங்கி 14.6.1922ல் 8,000 செலவில் கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது. 31.1.2005லும் குடமுழுக்கு நடைபெற்றது.

**52. நற்சாந்துப்பட்டி - சிதம்பரேசர் - சிவகாமியம்மை**

இவ்வூர் நகரத்தார்களால் ரூ.6,00,000 செலவில் திருப்பணியும், 23.5.1928, 1972, 1991லும், 2005லும் கும்பாபிஷேகமும் செய்யப்பெற்றது.

**53. செயங்கொண்டபுரம் (செக்காலை)**

காரைக்குடியின் ஒரு பகுதியாகவே இவ்வூர் விளங்குகிறது. சிவன் கோயில் இல்லை. நாட்டார் வயல் சோமசுந்தரம் செட்டியாரால் ரூ.25,000 செலவில் கல்கட்டுக் குளமும், விநாயகர் கோயிலும், விடுதியும், வாரியப்பட்டி சுப்பிரமணியன் செட்டியாரால் ரூ.12,000 செலவில் ஒரு குளமும், பிள்ளையார் கோயிலும் அமைக்கப் பெற்றுள்ளன.

**54. சோழபுரம் - அருள்மொழிநாதர் - அறம் வளர்த்த ஈஸ்வரி**

ஒக்கூர் ச.கரு.கி. பொதுக் குடும்பத்தாரால், ரூ.2,75,000 செலவில் சிவலயத் திருப்பணியும், பிலவங்க வருடம் வைகாசி மாதம் கும்பாபிஷேகமும் செய்யப்பெற்றன. பின் சி.கரு.சி.கரு. குடும்பத்தாரால் ரூ.1,25,000 செலவில், இராஜகோபுரம் முன் மண்டபம் முதலிய திருப்பணிகள் செய்யப் பெற்று, ஸ்ரீ முக வருடம் ஆனி மாதம் கும்பாபிஷேகம் செய்யப் பெற்றது.

**55. சொர்ணநாதபுரம் (தாணிச்சாவூருணி)**

சிவன் கோயில் இல்லை. இவ்வூர் கண்டதேவிக் கோயிலுக்கு அருகில் இருப்பதால், அதையே தங்களுக்குச் சிவாலயமாகப் பாவித்து, பிள்ளையார் பட்டெக் கோயில் வகுப்பார் 1824ல் ரூ.32,000 செலவில் கற்பகமுத்து விநாயகர் கோயிலும், தாணிச்சாவூருணியும் நிறுவியுள்ளனர். இக்கோயிலுக்கு ரூ.25,000 மதிப்புள்ள போரி வயல் என்ற கிராமம் மானியமாக அக்காலத்திலேயே விடப் பெற்றுள்ளது.

**56. நாட்டரசன்கோட்டை - கரிகால்சோழீசுவரர் - சிவகாமியம்மை**

இவ்வூர் நகரத்தார்களால் பொதுவில், ரூ.3,00,000 செலவிட்டு, மிகப் புராதனமான சிவாலயத் திருப்பணியும், 15.4.1859, 22.8.1926ல் இரண்டு கும்பாபிஷேகங்களும் செய்யப்பெற்றன. நகரத்தார்களால் ரூ.3,00,000 செலவில்

ஸ்ரீ நிவாசப் பெருமாள், ஆண்டாள் நாச்சியார் கோயில் திருப்பணி செய்யப்பெற்று, 12.6.1903ல் கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது. இவ்வூரில் பெருமாள் கோயிலும், கருப்பண்ணசுவாமி கோயிலும், ஊர்காவலன் என்ற ஐயனார் கோயிலும் உள்ளன. கண்ணுடைய நாயகியம்மை கோயில் கொடிமரம், அணியொட்டிக்கால் மண்டபம், இராஜகோபுரம் முதலிய எல்லாத் திருப்பணிகளும், நகரத்தார்களால் ரூ.4,00,000 செலவில் அமைக்கப் பெற்று, ஈசுவர வருடம் ஆவணி மாதத்தில் கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது. அம்மன் கோயிலுக்கு முன்னர், வெ.க.சு. வகையறாவால் ரூ.50,000 செலவில் தெப்பக்குளம் கல் திருப்பணியாகக்கட்டி முடிக்கப்பெற்று 1874ல் பிரதிஷ்டை செய்யப்பெற்றது. இவ்வம்மனுக்கு ரூ.50,000 செலவில் 18.5.1930ல் வெள்ளி ரதம் செய்யப்பெற்றுள்ளது.

**57. நெற்குப்பை - மனமொத்த கண்டீசர் - நித்தியகல்யாணி**

தெ.பெரி. பெரியண்ணன் செட்டியாரால், ரூ.20,000 செலவில் திருப்பணி செய்யப்பெற்று கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது. ராம.சா.பழ.சா. சாத்தப்ப செட்டியாரால் ரூ.40,000 செலவில் அம்மன் கோயில் திருப்பணி செய்து 13.7.1930ல் கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது. இவ்வூர் நகரத்தார்கள் ரூ.40,000 செலவில் சுப்பிரமணிய சுவாமி கோயில் திருப்பணி முடித்து 9.7.1905ல் கும்பாபிஷேகம் செய்தார்கள். பின் இராஜகோபுரம் ரூ.10,000 செலவில் புதுப்பித்து, 8.2.1935ல் கும்பாபிஷேகம் செய்வித்தனர். 1961, 1978, 1998 ஆண்டுகளில் குடமுழுக்கு நடைபெற்றுள்ளது.

**58. பட்டமங்கலம் - சோமசுந்தரேசுவரர் - மீனாட்சியம்மை**

வீர.அ. அடைக்கப்ப செட்டியாரால் 19.5.1930 கும்பாபிஷேகம் செய்யப்பெற்று, திருப்பணிகள், வெள்ளி வாகனங்கள், கும்பாபிஷேகச் செலவு ஆக ரூ.10,00,000 ஆகும். 1942, 1954, 1996, 1983, 1998 ஆகிய ஆண்டுகளில் குடமுழுக்கு நடந்துள்ளது.

**59. பலவான்குடி - சொக்கலிங்கம் - மீனாட்சியம்மை**

நகரத்தார்களால் ரூ.25,000 செலவில் திருப்பணியும், 1895ம் ஆண்டு கும்பாபிஷேகம் செய்வித்தனர். 1940, 1958, 1975, 1990, 2006 ஆகிய ஆண்டுகளில் நன்னீராட்டு விழா நடந்துள்ளது.

**60. பள்ளத்தூர் - சுந்தரேசுவரர் - மீனாட்சியம்மை**

இவ்வூர் நகரத்தார்களால் ரூ.7,00,000 செலவிட்டு திருப்பணியும், 10.7.1913ல் கும்பாபிஷேகமும் செய்யப்பெற்றது. பின் 1931, 1939, 1956, 1973, 1990, 2004 ஆகிய ஆண்டுகளில் நன்னீராட்டு விழா சிறப்பாக நடந்துள்ளது.

**61. பரியாமருந்துப்பட்டி - பறியாமருந்தீசர் - பரஞ்சோதியம்மை**

நெற்குப்பை முரு.பழ. பொதுக்குடும்பத்தார், 3,00,000 செலவில் திருப்பணி செய்து, விமானக் கோபுரங்கள், திருமதில்கள் எடுப்பித்து ரூ.10,000 செலவில் 12.2.1932ல் கும்பாபிஷேகம் செய்வித்தார்கள். பின் 2000ல் குடமுழுக்கு நடைபெற்றுள்ளது.

**62. பனையப்பட்டி - சுந்தரேசுவரர் - மீனாட்சியம்மை**

இவ்வூர் நகரத்தார்களால் முதலில் ரூ.40,000 செலவில் திருப்பணியும், கும்பாபிஷேகமும் செய்யப்பெற்றது. மீண்டும் 1977, 1991லும், 2005லும் குடமுழுக்கு நடந்துள்ளது.

**63. பாகநேரி - நீலகண்டீசுவரர் - கருணாகடாட்சியம்மை**

கு.ப.ராம. செட்டியாரால் ரூ.15,000 செலவில் கட்டப்பெற்றது. நாட்டார், நகரத்தார் இவர்கள் பொருளுதவியால் சோழீசர் கோயில், ரூ.3,000 செலவில் 1927ல் புதுப்பிக்கப்பட்டது. இவ்வூர் நகரத்தார்கள் ரூ.80,000 செலவு செய்து பெருமாள் கோயில் திருப்பணி செய்து 5.6.1935ல் கும்பாபிஷேகம் செய்வித்தார்கள். சிவன் கோயில் குடமுழுக்கு 2006ல் நடைபெற்றுள்ளது.

**64. P.புதுப்பட்டி - பூலோகநாதர் - புவனேசுவரியம்மை**

இவ்வூர் நகரத்தார்களால் ரூ.20,000 செலவிட்டு திருப்பணியும், 11.2.51ல் கும்பாபிஷேகமும் செய்யப்பெற்றது. 5.2.1968, 29.4.1982, 2008 ஆண்டுகளில் குடமுழுக்கு நடந்துள்ளது.

**65. மானகிரி - கண்டீசுவரர் - கண்டவனநாயகி**

இவ்வூர்க் கோயில், ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வெள்ளைக் கற்களால் திருப்பணி செய்யப்பெற்றது. நகரத்தார்களால் பிடாரியம்மன் கோயில் திருப்பணி செய்யப்பெற்று 1924ல் கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது. இக்கோயிலுக்கு மானியமாக ஒரு கிராமம் விடப்பெற்றிருக்கிறது. இவ்வூர் நகரத்தாருக்குப் பொதுவான சுப்பிரமணிய சுவாமி கோயில் உள்ளது. இக்கோயிலில் நவக்கிரகங்களும் தம் தேவியாருடன் திருமணக் கோலத்தில் காட்சி தருவது சிறப்பாகும். இவ்வாறு தேவியர்களுடன் கோள்களைச் சில இடங்களில் மட்டுமே காண முடிகிறது.

**66. நாச்சியாபுரம் - உமாமகேசுவரர் - உமாமகேசுவரி**

சுப.ராம. இராமன் செட்டியார், ரூ.75,000 செலவில், சிவாலயமும் ஊருணியும் நிறுவி, 9.7..1906ல் கும்பாபிஷேகம் செய்வித்தனர். 2001ல் குடமுழுக்கு நடைபெற்றுள்ளது. நகரப்பொதுவில் நாச்சியாரம்மன் கோயில்

கட்டப்பெற்றுள்ளது. அண்மையில் 1991ல் குடமுழுக்கு நடைபெற்றது. தண்டாயுதபாணி கோயில் உள்ளது.

**67. நேமத்தான்பட்டி**

சிவன் கோயில் இல்லை. மெ.மு.பழ. செட்டியாரால், 21.12.1921ல் சத்திரம் கட்டத் தொடங்கி ரூ.1,50,000 செலவில் முடிக்கப் பெற்று, 25.1.26 முருகன் கோயில் கும்பாபிஷேகம் செய்யப் பெற்றது.

**68. பனங்குடி**

சிவன் கோயில் இல்லை. கண்டரமாணிக்கம் மு.கரு.கருப்பன் செட்டியார் ரூ.500 செலவில் பிள்ளையார் கோயில் கட்டி, 1913ல் கும்பாபிஷேகம் செய்வித்தனர். ரூ.20,000 செலவில் பெரியநாயகியம்மை கோயில் திருப்பணியும், பெரி.மு.அரு.கண்ணப்ப செட்டியாரால் ரூ.3,000 செலவில் மண்டபமும் கட்டப் பெற்றுள்ளன.

**69. புதவயல் - வீரசேகரர் - உமையாம்பிகை**

நகரப் பொதுவில், ரூ.40,000 செலவில் கைலாச விநாயகர் கோயில் திருப்பணி பெரிதாகச் செய்யப் பெற்றுள்ளது. இக்கோயிலுக்கு 31.8.1995ல் 2007 குடமுழுக்கு நடந்தேறியுள்ளது.

**70. கீழப்பூங்குடி - சுந்தரேசுவரர் - மீனாட்சியம்மை**

கூராண்டான் செட்டியார், தீர்த்தப்ப செட்டியார் வகையினரால் ரூ.1,50,000 செலவில் சிவாலயத் திருப்பணியும், 1870 ஏப்ரல், 1932 ஆகஸ்டு, 3.7.1977ல் ஆகிய நாள்களிலும் மூன்று கும்பாபிஷேகங்கள் செய்யப்பெற்றன. 25.6.2007ல் 5 நிலை ராஜ கோபுரம் புதிதாக அமைத்து கும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது.

**71. பூலாங்குறிச்சி - எரிக்கீசுவரர் - பூலோகநாயகி**

ராம.ப.வ. பொதுக்குடும்பத்தார் சண்முக விநாயகர் கோயிலும், சண்முக நதி என்ற ஊருணியும் ரூ.30,000 செலவில் கட்டி 4.6.1889, 26.10.1928, 1960 ஆகிய ஆண்டுகளில் கும்பாபிஷேகங்கள் செய்திருக்கின்றார்கள். மலையில் ஒரு சிவன் கோயில் உள்ளது. சிங்காரவேலர், ஸ்ரீனிவாசப் பெருமாள் கோயில்கள் புதிதாகக் கட்டப்பட்டுள்ளன.

**72. பொன்னமராவதி**

இவ்வூர் சிவாலயம் பிற்காலச் சோழ மன்னரால் கட்டப்பட்டு நகரத்தாரால் புதுப்பிக்கப்பட்டுள்ளது. இவ்வூரிலுள்ள வைணவக் கோயிலுக்கு (அழகப்பெருமாள் விண்ணகர எம்பெருமான் கோயில்) கி.பி. 1527ல் பொன்னம்பலநாத தொண்டைமான் வீர நரசிங்கராயர் பெயரால் நிலங்கள் கொடையாக வழங்கப்பட்ட செய்தியும் தெரிகிறது. 12ம் நூற்றாண்டில் இங்கு

பாண்டியர் - சிங்களவர் போர் நடைபெற்றுள்ளது. கி.பி.13ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மூன்றாம் இராசராசனை மாறவர்ம சுந்தரபாண்டியன் (கி.பி.1216 – 1244) வெற்றி கண்டு ''பூங்கமல வாவிசூழ்'' பொன்னமராவதி அரண்மனைக்கு அழைத்து வந்து மீண்டும் சோழநாட்டை வழங்கிய ஊர் 17ம் நூற்றாண்டில் இவ்வூர் மருங்காபுரிச் சிற்றரசர்கள் ஆட்சியில் இருந்து கி.பி.1730ல் சேதுபதிகள் வசம் மாறியிருக்கிறது. ப.அ. அண்ணாமலைச் செட்டியார் ரூ.20,000 செலவில் பெருமாள் கோயிலைப் புதுப்பித்து 1916ல் கும்பாபிஷேகம் செய்வித்தனர்.

**73. மகிபாலன்பட்டி**

சிவன் கோயில் இல்லை. இவ்வூரைச் சுற்றிப் பல சிவலிங்கமூர்த்திகள் இருப்பதால், இது முற்காலத்தில் பெரிய நகராக இருந்திருக்க வேண்டும். இந்நகருக்கு மேற்புரம் குடகுமலை என்று வழங்கும் ஒரு சிறு குன்றில் கருவறை குடைந்தமைத்து, அதன் நடுவே ஓர் அழகான சிவலிங்கமும், வடபுறத்தில் ஒரு வலம்புரி விநாயகரும் முந்தைய பாண்டியர் காலத்தே பிரதிஷ்டை செய்யப்பெற்றுள்ளது. இந்நகரில் ஒரு ஐயனார் கோயிலும், ஒரு துர்க்கை கோயிலும் உண்டு. இது பூங்குன்ற நாட்டுத் தலைநகராதலின், ஐயனாருக்குப் பூங்குன்ற ஐயனார் என்றும் கொற்றவைக்குப் பூங்குன்ற நாயகி என்றும் பெயர் வழங்கப் பெறுகின்றது.

**74. மிதிலைப்பட்டி - ஆவுடைநாதர் - சிவயோகவல்லி**

இவ்வூர் சிவன்கோயில் நகரத்தார் பொதுவில் ரூ.3,00,000 செலவில் திருப்பணியும், 29.1.40 கும்பாபிஷேகமும் செய்யப் பெற்றன. 17.3.1957, 2.2.1984, 10.2.2000 ஆகிய நாள்களில் குடமுழுக்கு விழா நடந்துள்ளது. பழ.சுப. சுப்பிரமணியன் செட்டியாரால், ரூ.40,000 செலவில் வரதராசப் பெருமாள் கோயில் திருப்பணி செய்யப் பெற்று 1930ல் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது.

**75. விராமதி**

சிவன் கோயில் இல்லை. இளையாத்தங்குடிக் கோயில் கிராமங்களில் இதுவும் ஒன்று. நகரப் பொதுவில் பிள்ளையார் கோயில் ஒன்று கட்டப் பெற்றுள்ளது.

**76. வேந்தன்பட்டி - சொக்கலிங்கம் - மீனாட்சியம்மை**

இவ்வூர் சிறப்பு நெய் நந்தியாகும். நகரத்தார்களால் 12.11.1911ல் ரூ.30,000 செலவில் திருப்பணியும் பின், 14.6.1922, 25.1.1931, 14.11.1948, 12.9.1973, 18.5.1983, 26.1.1996 ஆகிய ஆண்டுகளில் கும்பாபிஷேகம் நடைபெற்றது.

**77. மேலைச்சிவபுரி - சொக்கலிங்கம் - மீனாட்சியம்மை**

இவ்வூர் நகரத்தார்கள் ரூ.20,000 செலவில் திருப்பணியும், 14.6.1922ல் கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது. பின் 27.1.1947 திருப்பணி செய்து

கும்பாபிஷேகம் நடத்தப்பெற்றன. பின் 9.7.1962ல் கும்பாபிஷேகம் பத்மஸ்ரீ ஆ.நாகப்ப செட்டியாரின் நன்கொடையால் (ரூ.35,000) நடைபெற்றது. 32 ஆண்டுகளுக்குப் பிறகு 1994ல் பழைய கோயிலை நீக்கிவிட்டு அடிப்படை முதல் புதிய கோயிலாகவே அம்மன் சுவாமி சன்னதிகள் கல்திருப்பணியாக்கமும் ராஜகோபுரமும் மேலைச்சிவபுரி, நகரத்தார்களின் கூட்டு முயற்சியால் ரூ.50 லட்சம் செலவில் புதிய சிவன் கோயில் நிர்மாணிக்கப்பட்டு குடமுழுக்கு நடைபெற்றது. 4 ஆண்டுகள் இத்திருப்பணி நடைபெற்றது. தற்பொழுது 2007ல் குடமுழுக்கு நடைபெற்றது. சீனிவாசப் பெருமாள் கோயில் ஒன்று உள்ளது. இவ்வூர் ப.சா. சிங்காரம் செட்டியார் குடும்பத்தினர்களால், வீரஆஞ்சநேயர் கோயில் பல லட்சம் செலவில் கட்டப்பட்டு குடமுழுக்கு தமிழ் முறைப்படி நடத்தப் பெற்றது. இவ்வூர் கரு.தே.தேனப்ப செட்டியார் குடும்பத்தினர்களின் பெரும் பங்களிப்பில் கல்யாண சுந்தரராஜப் பெருமாள் கோயில் கட்டப் பெற்றுள்ளது.

**78. ராயவரம் - சுந்தரேசுவரர் - மீனாட்சியம்மை**

வெ.மு.வேலன் செட்டியாரால் ரூ.1,00,000 திருப்பணி செய்து 6.2.1870, 5.6.1914, 11.2.1951, 9.2.1981, 28.4.1994 ஆகிய ஆண்டுகளில் கும்பாபிஷேகம் நடைபெற்றன.

**79. கொ.லெட்சுமிபுரம் (கொத்தமங்கலம்)- சொக்கலிங்கம் - மீனாட்சியம்மை**

இவ்வூர் நகரத்தார்களால் ரூ.40,000 செலவில் திருப்பணியும், 1908 மற்றும் 1936, 1957 ஆகிய ஆண்டுகளில் கும்பாபிஷேகமும் செய்யப் பெற்றன. ந.சொ.அரு.அருணாசலம் செட்டியாரால் ரூ.10,000 செலவில் 5.7.1924ல் வெள்ளிக் கைலாச வாகனம் அமைக்கப் பெற்றுள்ளது.

**80. நெ.லட்சுமிபுரம் (நெய்க்கோணம்)- சுந்தரேசுவரர் - மீனாட்சியம்மை**

இவ்வூர் நகரத்தார்களால் ரூ.25,000 செலவில் திருப்பணியும், 13.11.1921, 29.1.1993 ஆண்டுகளில் கும்பாபிஷேகம் நடைபெற்றன.

**81. வலையப்பட்டி - வலம்புரிநாதர் - வடுவகிர்விழியாள் (மலையாண்டி கோயில்)**

இவ்வூர் நகரத்தார்கள், அவர்களாகவே கட்டிடப் பணியில் ஈடுபட்டு ஆரம்பத்தில் ரூ.1,00,000 செலவில் திருப்பணியும், 1892, 1916, 1941, 1978, 1993, 2008 ஆண்டுகளில் கும்பாபிஷேகம் நடைபெற்றன.

**82. விரையாச்சிலை - வில்வவனநாதர் - ரஷாவதாரியம்மை**

அ.ராம. இராமநாதன் செட்டியார், சிவாலயத்தை புதுப்பித்து ரூ.2,00,000 செலவில் திருப்பணி செய்து கும்பாபிஷேகம் நடத்தினார்.

**83. வெற்றியூர் - அருந்ததீசுவரர் - சவுந்தரநாயகி**

இவ்வூர் நகரத்தார்களால் ரூ.5,000 செலவில் திருப்பணி செய்து ஆகஸ்டு 1892ல் கும்பாபிஷேகம் நடைபெற்றது. 2005ல் சிவன்கோயிலுக்கும், அன்னபூரணி அம்மன் கோயிலுக்கும் குடமுழுக்கு நடைபெற்றது.

**84. வேகுப்பட்டி - சிவலோகநாதர் - சிவகாமசுந்தரி**

சி.இராம. பொதுக் குடும்பத்தாரால் திருப்பணி செய்து 1924ல் முதல் கும்பாபிஷேகமும், 1976, 1991, 2003 ஆகிய ஆண்டுகளில் திருக்குட நன்னீராட்டு விழாவும் நடைபெற்றது. பன்னிரு திருமுறைகளுக்கும் தனிச் சன்னதி அமைக்கப்பட்டிருப்பது தனிச்சிறப்பு. 2009ல் முத்துப் பழனியப்ப செட்டியார் அவர்களால் பெருமாள் கோயில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு குடமுழுக்கு செய்யப்பெற்றது.

**85. இராங்கியம் - பூமிநாதர் - சிவகாமியம்மை**

மிகப் பழமையான இச்சிவன் கோயிலில் கி.பி.13 – 14ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டுகள் உள்ளன. இக்கல்வெட்டில் பொன்னமராபதி நாட்டு இராசசிங்க மங்கலத்து உடையார் திருப்பூமீஸ்வரமுடைய நாயனார் திருக்கோயில் என ஊரும், இறைவனும் குறிக்கப்படுகிறார். வ.நா. குடும்பத்தாரால், ரூ.40,000 செலவிடப் பெற்று, சிதம்பர விநாயகர் கோயில் திருப்பணியும், கும்பாபிஷேகமும் செய்யப் பெற்றன. சிவன் கோயில் 2008ல் குடமுழுக்கு செய்யப் பெற்றுள்ளது.

**86. ஆ. முத்துப்பட்டணம்**

சிவன் கோயில் இல்லை. இவ்வூர் நகரத்தார்களால் பொதுவில், ரூ.25,000 செலவில் உலகநாயகியம்மை கோயில் திருப்பணியும், 1.5.1890ல் கும்பாபிஷேகமும் செய்யப் பெற்றன.

## III. பாடல் பெற்ற கோயில்களில் நகரத்தார் அறப்பணிகள்

**87. சிதம்பரம் - நடராஜப்பெருமான் - சிவகாமி அம்மை**

இச்சிவாலயத்தில் சா.ராம.முத்தையா செட்டியார், இவருடைய மகன் திவான் பகதூர் மு. இராமசாமி செட்டியார், சகோதரர் சா.ராம. சிதம்பரம் செட்டியார் ஆகியோர்கள் மற்றும் நகரத்தார்களின் பொருளுதவியில் புதிதாக முக்குருணி அரிசிப் பிள்ளையார் கோயிலும், சிற்சபையின் பொன் ஓடுகளும், இரண்டாம் பிரகாரத்தில் அணியொட்டிக் கால் மண்டபம், ஆயிரக்கால் மண்டபம் புதுப்பித்து, சிவகங்கைத் திருக்குளம், படித்துறைகள், மண்டபம் புதிதாகக்

கட்டி, இராஜகோபுரம் புதுப்பித்து, உற்சவ மண்டபம், வாகன மண்டபமும் புதிதாக அமைக்கப்பட்டன. திருமூலட்டானம் சுவாமி கோயில், அம்மன் கோயில், திருக்குளங்கள் ஆகியவை புதுப்பிக்கப்பட்டன. கோயிலுக்குத் தேரும், திருவாபரணங்களும் செய்யப்பட்டன. இவை தவிர மேலும் பல திருப்பணிகள் ரூ.30,00,000 செலவில் செய்து முடிக்கப்பட்டு 14.4.1891ல் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. இராஜா.சர்.அண்ணாமலை செட்டியார் அவர்களால் தில்லைக் கோவிந்தராஜ பெருமாள் கோயில் திருப்பணி செய்யப்பட்டு 24.5.1934ல் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது.

**88. இரவிசேரி - மும்முடிநாதர்**

**89. கல்லாங்குடி - திருப்பாதேசுவரர் - யோகாம்பிகை**

**90. கோவிலூர் - கொற்றவாளீசுவரர் - திருநெல்லைநாயகி**

**91. வன்னியன் சூரைக்குடி - சுந்தரேசுவரர் - மீனாட்சியம்மை**

**92. திருவேட்களம் - பாசுபதேசுவரர் - நல்ல நாயகி**

கானாடுகாத்தான் சா.ராம.மு.இராமசாமி செட்டியார், கா.பெ.அ. பெத்தபெருமாள் செட்டியார் ஆகிய இருவரால் ரூ.1,00,000 செலவில் புதிதாய் கட்டப்பட்டு 1.6.1917 கும்பாபிஷேகம் நடைபெற்றது.

**93. திருநெல்வாயில் (சிவபுரி) - உச்சிநாதேசுவரர் - கனகாம்பிகை**

கோட்டையூர் க.வீ.சொ.வீ.அழகப்ப செட்டியார், க.வீ.மு.ப. கதிரேச செட்டியார், காரைக்குடி முத்து அரு.மு. அருணாசல் செட்டியார் ஆகிய மூவரால் ரூ.3,27,500 செலவில் திருப்பணியும், 24.5.1928ல் கும்பாபிஷேகமும், இராச கோபுர கும்பாபிஷேகமும் செய்யப்பெற்றன.

**94. திருக்கழிப்பாலை - பால்வண்ணநாதர் - வேதநாயகி**

சுமார் 100 ஆண்டுகளுக்கு முன் அமைக்கப்பெற்றது. தேவகோட்டை ராம.அரு.அரு. அருணாசலம் செட்டியாரால் திருப்பணிகள் செய்து ரூ.61,000 செலவில் செய்யப்பெற்று 26.8.1907ல் கும்பாபிஷேகம் நடைபெற்றது.

**95. திருநல்லூர்ப் பெருமணம் (ஆச்சாள்புரம்)- சிவலோகத்தியாகேசர் - நங்கையுமையம்மை**

காரைக்குடி, பெரி.நா.நாராயணன் செட்டியாரால் ரூ.25,000 செலவில் திருப்பணியும், 10.7.1913ல் கும்பாபிஷேகம் நடைபெற்றது.

**96. திருமயேந்திரப்பள்ளி - திருமேனியழகர் - வடிவாம்பிகை**

தேவகோட்டை, பழ. சோமசுந்தரம் செட்டியாரால் ரூ.17,000 செலவில் புதுப்பிக்கப் பெற்று 14.7.1938ல் கும்பாபிஷேகம் நடைபெற்றது.

**97. திருப்பல்லவனீச்சரம் (காவிரிப்பூம்பட்டினம்) – பல்லவனேசுவரர் - சவுந்திரநாயகி**

வயிநாகரம் குடும்பத்தினரால் ரூ.1,00,000 செலவில் புதிதாகத் திருப்பணி செய்து 10.5.1900ல் கும்பாபிஷேகம் நடைபெற்றது.

**98. திருவெண்காடு - சுவேதாரண்யேசுவரர் - பிரம்ம வித்தியாநாயகி**

தேவகோட்டை மு.ராம. சுப்பிரமணியன் செட்டியார் அவர்கள் புதல்வர்களால் அம்மன் கோயில் ரூ.1,00,000 செலவில் திருப்பணி செய்து 16.6.1940ல் கும்பாபிஷேகம் நடைபெற்றது.

**99. சீர்காழி - பிரமபுரீசுவரர் - திருமலை நாயகி**

அமராவதிபுதூர் வயிநாகரம் குடும்பத்தாரும், தேவகோட்டை ராம.அரு.அரு.வும் அம்மன் கோயிலை ரூ.80,000 செலவில் புதிதாயக் கட்டி, 1.6.1898ல் கும்பாபிஷேகம் நடைபெற்றது. நகரத்தார்களால் வேதபாடசாலை, நந்தவனம், குருபூசைமடம் முதலியன நிறுவப்பெற்றுள்ளன.

**100. திருக்கோலக்கா (திருத்தாளமுடையார் கோவில்) – சத்தபுரீசுவரர் - ஓசைகொடுத்த நாயகி**

தேவகோட்டை ராம.மெ.சித.வயி.ராம. வைரவன் செட்டியாரால் ரூ.3,50,000 செலவில் திருப்பணியும், 29.2.1923, அம்மன் கோயில் கும்பாபிஷேகமும், 5.12.1928ல் சுவாமி கோயில் கும்பாபிஷேகமும் நடைபெற்றது.

**101. திருப்புள்ளிருக்குவேளூர் (வைத்தீசுவரன் கோவில்) – வைத்தியநாதர் - தையல்நாயகி**

திருக்குளத்தின் மேல் கரையில் மண்டபமும், வெள்ளித் தேரும் கானாடுகாத்தான் கரு.தூ. வகையினரால் ரூ.75,000 செலவில் அமைக்கப்பெற்று, 26.6.1891ல் முதல் கும்பாபிஷேகமும், ரூ.80,000 செலவில் கோயில் சீர்திருத்தங்களும், 1.9.1927ல் இரண்டாம் கும்பாபிஷேகமும் நடைபெற்றது.

**102. திருக்கண்ணார் கோவில் - கண்ணாயிரேசுவரர் - முருகுவளர் கோதையம்மை**

கண்டனூர் தெ.அரு.சித. அருணாசலம் செட்டியார் குடும்பத்தார், அ.சி.நா.சி.நாச்சியப்ப செட்டியார், சிதம்பரம் செட்டியார் இவர்களால் ரூ.3,00,000 செலவில் திருப்பணி செய்யப்பெற்று, 8.7.1935ல் கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது.

**103. திருநின்றியூர் - மகாலட்சுமீசவரா் - உலகநாயகி**

தேவகோட்டை ராம.அரு.அரு. அருணாசலம் செட்டியாரால் ரூ.60,000 செலவில் புதிதாகச் செய்யப்பெற்று, 19.6.1899ல் கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது.

**104. திருப்புன்கூர் - சிவலோகநாதா் - சொக்கநாயகி**

கானாடுகாத்தான் கரு.தூ.சிதம்பரம் செட்டியாரால் புதிதாகத் திருப்பணி செய்யப்பெற்று 18.6.1908ல் கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது.

**105. திருநீடுா் - சோமநாதேசுவரா் - வேயுறு தோளியம்மை**

அரிமளம் அ.அரு. அண்ணாமலைச் செட்டியாரால் ரூ.15,000 செலவில் திருநந்தவனம் நிறுவப்பட்டது.

**106. திருஅன்னியூா் - ஆபத்சகாயேசுவரா் - பெரிய நாயகி**

தேவகோட்டை ராம.மெ.சித.வயி. இராமநாதன் செட்டியாரால் ரூ.70,000 செலவில் பிப்ரவரி 1901ல் கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது.

**107. திருநாரையூா் (பொல்லாப் பிள்ளையாா்) – சவுந்தரேசுவரா் - திரிபுரசுந்தரி**

பொல்லாப்பிள்ளையாா் கோயில், காரைக்குடி ப.ரா.ம.இலக்குமணன் செட்டியாரால் திருப்பணி செய்யப்பெற்று, காரைக்குடி ப.ராம.லெ.ராம.இலக்குமணன் செட்டியாரால் ரூ.3,000 செலவில் நகர விடுதியும், நகரத்தாா் பொருளுதவியால் ரூ.1,500 செலவில் பிள்ளையாருக்கு வெள்ளிக் கவசமும், பெருச்சாளி வாகனமும் அமைக்கப்பெற்றன.

**108. திருக்கடம்பூா் - அமிா்தகடேசுவரா் - சோதிமின்னம்மை**

தேவகோட்டை ராம.அரு.அரு. அருணாசலம் செட்டியாா், அவா் மகன் சோமசுந்தரம் செட்டியாரால் ரூ.50,000 செலவில் திருப்பணி செய்து 18.5.1903ல் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. மீண்டும் இவா்களே 20.4.1927ல் இரண்டாம் கும்பாபிஷேகம் செய்தனா்.

**109. திருக்கஞ்சனூா் - அக்கினீசுவரா் - கற்பகநாயகி**

தேவகோட்டை ராம.அரு.ராம.வெ. வெங்கடாசலம் செட்டியாரால், ரூ.20,000 செலவில் திருப்பணி செய்து, யுவ வருடம் கும்பாபிஷேகம் நிறைவெய்தியது.

**110. திருவியலூா் - யோகானந்தேசுவரா் புராதனேசுவரா் - சவுந்தரநாயகி**

அம்மன் கோயிலுக்கு தேவகோட்டை கரு.மெ. கதிரேசச் செட்டியாரால் புதிதாய்த் திருப்பணி செய்து 20.6.1929ல் கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது. தேவகோட்டை அ.ராம.லெ. அருணாசலம் செட்டியாரால் திருப்பணி செய்து 2.6.1933ல் கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது.

**111. திருஇன்னம்பா் - எழுத்தறிநாதா் - சவுந்தரநாயகி**

சண்முகநாதபுரம் சே.வு. விசுவநாதன் செட்டியார் ராம.அரு.அரு.ராம.அருணாசலம் செட்டியாரால் திருப்பணி செய்யப்பெற்றுள்ளது.

**112. திருவையாறு - பஞ்சநதீசுவரர் - அறம் வளர்த்த நாயகி**

அறம் வளர்த்த நாயகி கோயில் திருப்பணி, தேவகோட்டை உ.ராம.மெ.சுப.சேவு. மெய்யப்ப செட்டியார், அவர் சகோதரர் பஞ்சநாதம் செட்டியார், அண்ணாமலை செட்டியார் இவர்களால் ரூ.10,00,000 செலவில் செய்யப்பெற்று ரூ.40,000 செலவில் 2.5.1937ல் கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது.

**113. திரு அன்பிலாலந்துறை - ஆலந்துறைநாதர் - சவுந்தரநாயகி**

கோனாப்பட்டு ராம.சு.லெ.இலக்குமணன் செட்டியாரால் ரூ.2,00,000 செலவு செய்யப்பட்டு, 25.4.1919ல் கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது.

**114. திருஆனைக்கா - ஜம்புகேசுவரர் - அகிலாண்டநாயகி**

கானாடுகாத்தான் சா.ராம.சித.சிதம்பரம் செட்டியாரால் ரூ.10,00,000 செலவிட்டு 6.2.1908ல் கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது.

**115. திருக்கடம்பந்துறை (குளித்தலை) – கடம்பவனநாதேசுவரர் - முற்றிலாமுலையம்மை**

தேவகோட்டை, பழ.அ. வெங்கடாசலம் செட்டியாரால், திருப்பணி செய்யப்பட்டு, பிரகாரங்கள், மண்டபங்கள் புதிதாகக்கட்டி 11.6.1927ல் கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது.

**116. திருப்பராய்த்துறை - பராய்த்துறைநாதர் - பொன்மயிலாம்பிகை**

ரூ.8,00,000 செலவில் புதுப்பிக்கப்பட்டு, கானாடுகாத்தான் வெ.வீர. நாகப்ப செட்டியாரால் திருப்பணி செய்து, ரூ.12,000 செலவில் 26.6.10ல் முதல் கும்பாபிஷேகம் செய்வித்தனர். பின்பு நாகப்ப செட்டியார் மகன்களான வீரப்ப செட்டியார், முத்தையா செட்டியார், அருணாசலம் செட்டியார் இவர்களால் இராசகோபுரம், வெளிமண்டபம், உற்சவ மண்டபம், கொடிமரம், நந்திமண்டபம், விநாயகர், தண்டாயுதபாணி கோயில்கள் முதலியன கல்திருப்பணியாகவும், விமானங்கள், கோபுரங்கள், நூற்றுக்கால் மண்டபம், திருமதில் முதலியன ரூ.2,00,000 செலவில் புதுப்பித்து 26.5.1940ல் ரூ.7,000 செலவில் இரண்டாம் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது.

**117. திருமூக்கீச்சுரம் (உறையூர்) – பஞ்சவர்ணேசுவரர் - காந்திமதியம்மை**

இத்தல சிவாலயம்,தேவகோட்டை வீர.ராம.சித.முரு. முருகப்ப செட்டியாரால் ரூ.4,00,000 செலவில் திருப்பணி செய்து 3.5.22ல் கும்பாபிஷேகம் நிறைவெய்தியது.

**118. திருச்சிராப்பள்ளி (மலைக்கோட்டை) – தாயுமானேசுவரர் - மட்டுவார்குழலம்மை**

இத்தலச் சிவாலயத்தில் இவ்வூர் செட்டியார் ஒருவரால் பல திருப்பணிகள் செய்து, ஜனவரி 1889ல் கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது. நாட்டரசன் கோட்டை அரு.சு.வெ.காசி விசுவநாதன் செட்டியாரால், இராசகோபுரம் திருப்பணி செய்து 13.6.1927ல் இரண்டாம் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. சித.முரு.பெரு. அவர்களின் முயற்சியால் பல திருப்பணி செய்யப்பெற்றுள்ளன.

**119. திருவெறும்பியூர் - எறும்பீசுவரர் - நறுங்குழல்நாயகி**

கோயில் ஒரு சிறுமலை மீது உள்ளது. காரைக்குடி ராம.வீர.மு. வீரப்ப செட்டியாரால் ரூ.5,000 செலவில் திருப்பணி செய்யப்பெற்றது.

**120. திருத்தென்குடித்திட்டை - பசுபதீசுவரர் - உலகநாயகியம்மை**

பலவான்குடி, ராம.கு.ராம. இராமசாமிச் செட்டியாரால் ரூ.3,00,000 செலவில் திருப்பணி செய்து திருக்குளங்கள், நந்தவனம், பசுமடம் ஆகியவை ரூ.1,00,000 செலவு செய்யப்பெற்று, 20.4.1951ல் கும்பாபிஷேகம் ரூ.25,000 செலவில் செய்யப்பெற்றது.

**121. திருக்குடந்தைக் காரோணம் - காசி விசுவநாதர், சோமநாதர் காசி விசாலாட்சி, தேனார் மொழியம்மை**

கும்பகோணம் நாட்டுக் கோட்டை நகரத்தார் மகமைப் பணம்கொண்டு, வியநாகரம் வெ. இராமநாதன் செட்டியார் முயற்சியால், ரூ.85,000 செலவில் திருப்பணி செய்யப்பெற்று, 3.2.1909ல் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது.

**122. திருநாகேச்சுரம் - நாகநாதேசுவரர் - குன்றமுலை நாயகி**

இவ்வூர்ச் சிவாலயம், அரிமழம் அ.அரு. அண்ணாமலைச் செட்டியாரால் ரூ.50,000 செலவில் திருப்பணி செய்து ஜனவரி 1929ல் கும்பாபிஷேகம் செய்யப் பெற்றது.

**123. திருவிடைமருதூர் - மகாலிங்கேசுவரர் - பெருநலமாமுலை நாயகி**

தேவகோட்டை மெ.லெ.மெ.நா.இராமநாதன் செட்டியாரால் ரூ.8,00,000 செலவில் திருப்பணி செய்து 8.11.1905ல் முதல் கும்பாபிஷேகம் செய்தனர். 8.7.1916ல் இரண்டாவது கும்பாபிஷேகம் செய்தனர்.

**124. திருவைகன் மாடக்கோவில் - வைகனாதேசுவரர் - கைலாம்பிகை**

தேவகோட்டை ராம.மெ.லெ.ராம. இராமநாதன் செட்டியாரால் திருப்பணி செய்து 27.6.1907ல் கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது.

**125. திருத்துருத்தி - வேதேசுவரர் - முகிழாம்பிகை**

தேவகோட்டை இராம.அரு.இராம.வெ. அவர்களால் ரூ.25,000 செலவில் சீர்திருத்தப் பெற்று கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது.

**126. திருமயிலாடுதுறை (மாயூரம்) – மாயூரநாதேஜவரர் - அபயாம்பிகை**

தேவகோட்டை அழ.வீர.பெ.வீர. வெங்கடாசலம் செட்டியாரால் ரூ.22,000 செலவில் 25.4.1920ல் அம்மன் கோயில் கும்பாபிஷேகமும், அவர் மகன்கள் பெத்த பெருமாள் செட்டியார், வீரப்ப செட்டியார் இருவராலும், ரூ.2,00,000 செலவில் திருப்பணி செய்யப்பெற்று ரூ.1,10,000 செலவில் 2.8.1928ல் இரண்டாவது கும்பாபிஷேகம் செய்யப்பெற்றன.

**127. திருக்கடவூர் வீரட்டம் - அமிர்தகடேசுவரர் - அபிராமியம்மை**

ரூ.10,000 செலவில் கோனாப்பட்டு சு.ப.கு. சொக்கலிங்கம் செட்டியாரால் நந்தவனம் அமைக்கப்பட்டுள்ளது.

**128. திருவேட்டக்குடி - திருமேனியழகேசுவரர் - சாந்த நாயகி**

தேவகோட்டை ராம.மெ. இலக்குமணன் செட்டியாரால் ரூ.2,00,000 செலவில் திருப்பணி செய்து 4.7.1892ல் முதல் கும்பாபிஷேகமும், 7.7.1930ல் இரண்டாவது கும்பாபிஷேகமும் செய்யப்பெற்றது.

**129. கோயிற்பத்து (திருத்தெளிச்சேரி) – பார்வதீசுவரர் - சாத்தியம்மை**

தேவகோட்டை சேவு.ராம.சேவுகன் செட்டியார், அருணாசலம் செட்டியார், அ.வயி.அ.நா. சோமசுந்தரம் செட்டியார் இவர்களால் ரூ.2,00,000 செலவில் புதிதாய்த் திருப்பணி செய்து, 3.6.1917ல் முதல் கும்பாபிஷேகம் செய்து, 3.7.1944ல் இரண்டாவது கும்பாபிஷேகம் செய்யப் பெற்றன.

**130. திருத்தருமபுரம் - யாழ்முரிநாதேசுவரர் - தேனமிர்தவல்லி**

சுவாமி, அம்மன் திருக்கோயில்கள், சுற்றுக் கோயில்கள் எல்லாம், ரூ. 75,000 செலவில் தேவகோட்டை, அரு.அரு.சோம. செட்டியாரால் திருப்பணி செய்து 15.9.1910ல் கும்பாபிஷேகம் நிறைவெய்தியது.

**131. திரு அம்பர்மாகாளம் - காளகண்டேசுவரர் - பட்ச நாயகி**

அம்மன் கோயில் பள்ளத்தூர் க.ப. குமரப்ப செட்டியாரால் ரூ.50,000 செலவில் திருப்பணி செய்யப்பெற்று, 3.6.1917ல் கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது.

**132. திருத்திலதைப்பதி (மதிமுத்தம்) – முத்தீசுவரர் - பொற்கொடியம்மை**

தேவகோட்டை ராம.மெ.லெ. இராமநாத செட்டியாரால் ரூ.1,00,000 செலவில் திருப்பணி செய்து கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது.

**133. திருவீழிமிழலை - வீழியழகேசர் - சுந்தரகுசாம்பிகை**

தேகோட்டை ராம.அரு.அரு. சத்திரம் அருணாசல் செட்டியாரால் திருப்பணி செய்து கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது.

**134. திருஅரிசிற்கரைப்புத்தூர் - படிக்காசளித்த ஈசர் - அழகாம்பிகை**

தேவகோட்டை இராம.மெ.லெ. இராமநாதன் செட்டியார், நேமத்துப்பட்டி மெ.மு.பழ. பழநியப்ப செட்டியார் இவர்களால் ரூ.1,00,000 செலவில் திருப்பணி செய்து 8.7.1925ல் கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது.

**135. திருக்கலயநல்லூர் - அமிர்தகலேசுவரர் - அமிர்தவல்லி**

காரைக்குடி முத்த.வெ. வெள்ளையன் செட்டியாரால் ரூ.15,000 செலவில் திருப்பணி செய்து 4.9.1925ல் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது.

**136. திருப்புகலூர் - அக்கினீசுவரர் - கருந்தாள்குழலி**

காரைக்குடி, பெரி.ஆ. அருணாசலம் செட்டியாரால் பசுமடம் நிறுவப்பெற்றுள்ளன.

**137. திருவிற்குடி - வீரட்டானேசுவரர் - மைவார்குழலியம்மை**

பள்ளத்தூர் சொ.மு.அ.மெ. அருணாசலம் செட்டியாரால் ரூ.6,00,000 செலவில் திருப்பணி செய்யப்பெற்று, 30.4.1931ல் கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது.

**138. திருச்செங்காட்டாங்குடி - கணபதீசுவரர் - திருக்குழல் நாயகி**

காரைக்குடி, மெ.செ. குடும்பத்தினர் ரூ.25,000 செலவில் திருப்பணி செய்து 1897ல் கும்பாபிஷேகம் செய்துள்ளனர்.

**139. திருமருகல் - மாணிக்கவண்ணேசுவரர் - வண்டுவார்குழலம்மை**

தேவகோட்டை ராம.மெ.சித.வயி. இராமநாதன் செட்டியாரால் ரூ.1,20,000 செலவில் புதிதாய்த் திருப்பணி செய்து, ஏப்ரல் 1825ல் முதல் கும்பாபிஷேகமும், அவர் மகன் வைரவன் செட்டியாரால் ரூ.10,000 செலவில் திருப்பணி செய்யப்பெற்று 5.9.1925ல் இரண்டாம் கும்பாபிஷேகமும், குமர.கரு.கரு. வகையினரால் திருக்குளமும், விடந்தீர்த்த விநாயகர் கோயிலும், ரூ.15,000 செலவில் அமைக்கப்பட்டு, 13.6.43ல் மூன்றாம் கும்பாபிஷேகமும் செய்யப் பெற்றன.

**140. திருச்சாத்தமங்கை - அயவந்தீசுவரர் - மலர்க்கண்ணம்மை**

கடியாபட்டி பி.கு.நா. நாகப்ப செட்டியாரால் ரூ.7,00,000 செலவில் புதிதாய்த் திருப்பணி செய்யப் பெற்று, 26.8.1928ல் கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது.

**141. திருநாகைக்காரோணம் (நாகப்பட்டினம்) – காயாரோகணேசுவரர் - நீலயதாடசி**

நாகப்பட்டினம் நாட்டுக்கோட்டை நகரத்தார்களால், மிகுந்த பொருட் செலவில் புதுத் திருப்பணிகள் செய்யப் பெற்றுள்ளது.

**142. திருச்சிக்கல் (சிக்கல்) - வெண்ணையிலிங்கேசுவரர் - வேனெடுங்கண்ணியம்மை**

இவ்வூர் சிங்காகர வடிவேலர் கோயில் ஆ. தெக்கூர் கரு. முத்து, அழகப்ப செட்டியார் குடும்பத்தின் நிதியிலிருந்து இப்பாகத்தினர் ஒருவராகிய அழகப்ப செட்டியாரால் பல திருப்பணிகள் செய்யப் பெற்று 5.6.1933ல் கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது.

**143. திருப்பள்ளியின் முக்கூடல் - முக்கோணநாதர் - மைமேவு கண்ணியம்மை**

தேவகோட்டை அழ.சு.ப.சு.சுப்பையா செட்டியாரால் ரூ.60,000 செலவில் திருப்பணி செய்து 1903ல் கும்பாபிஷேகம் செய்யப் பெற்றுள்ளது.

**144. திருவாரூர் - வன்மீகநாதர் - அல்லியங்கோதையம்மை**

தேவகோட்டை ராம.அரு.அரு. சத்திரம் அருணாசலம் செட்டியார், அவர் மகன் இராமநாதன் செட்டியார் ஆகியவர்களால் திருப்பணி செய்யப்பெற்று ஜூன் 1893ல் கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது.

**145. திருவிளமர் - பதஞ்சலி மனோகரேசுவரர் - யாழினு மென்மொழியம்மை**

தேவகோட்டை வீர.லெ. சின்னையா செட்டியாரால் திருமதில் உட்பட உல்லாக் கோயில்களும் திருப்பணி செய்து, கும்பாபிஷேகம் செய்யப்பட்டது.

**146. திருக்கரவீரம் - கரவீரேசுவரர் - பிரத்தியட்சமின்னம்மை**

தேவகோட்டை ராம.அரு.அரு.ராம.அருணாசலம் செட்டியாரால் ரூ.20,000 செலவில் திருப்பணி செய்யப்பெற்று 1.9.1938ல் கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது.

**147. திருச்சேறை - செந்நெறியப்பர் - ஞானவல்லி**

தேவகோட்டை மெ.வ.விசுவநாதன் செட்டியார், தியாகராசன் செட்டியார், மாணிக்கம் செட்டியார் ஆகியவர்களால் திருப்பணி செய்யப்பெற்றது.

**148. திருப்பெருவேளூர் - பிரியாயீசுவரர் - மின்னனையாளம்மை**

தேவகோட்டை, ராம.அரு.அரு.ராம. அருணாசல செட்டியாரால் ரூ.20,000 செலவில் திருப்பணி செய்யப்பெற்று, 1.7.1931ல் கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது.

**149. திருக்கடுவாய்க்கரைப்புத்தூர் - சொர்ணபுரீசுவரர் - சிவாம்பிகை**

தேவகோட்டை பழ.செ. குடும்பத்தாரால் ரூ.3,00,000 செலவில் திருப்பணி செய்யப்பெற்று, 10.7.1914ல் முதல் கும்பாபிஷேகமும், 3.7.44ல் ரூ.17,000 செலவில் இரண்டாவது கும்பாபிஷேகமும் செய்யப்பெற்றன.

**150. திருஇரும்பூளை (ஆலங்குடி) – காசி ஆரணியேசுவரர் - ஏலவார் குழலியம்மை (குருதலம்)**

தேவகோட்டை பழ. செ. இலக்குமணன் செட்டியார், பழநியப்ப செட்டியார், அ.கண. வீரப்ப செட்டியார், நாட்டரசன்கோட்டை அரு.ஆ.ஆறுமுகம் செட்டியார், தேவகோட்டை ஆ.வி.க. மெய்யப்ப செட்டியார், பெரி.லெ.வெ. குடும்பத்தார், மகிபாலன்பட்டி, அழ.கரு.கருப்பன் செட்டியார், தேவகோட்டை நகரத்தார் சிலர், வேகுப்பட்டி நகரத்தார், பிள்ளையார்பட்டி நகரத்தார், கல்லல் நகரத்தார், கானாடுகாத்தான் இராஜா ஸர். அண்ணாலைச் செட்டியார், ஆகிய இவர்களால் ரூ. 4,75,000 செலவில் திருப்பணி செய்யப்பெற்று 1.6.1930ல் கும்பாபிஷேகம் சிறப்புறச் செய்யப்பெற்றது.

**151. திருஅவளிவள்நல்லூர் - சாட்சிநாயகேசுவரர் - சவுந்தரநாயகி**

காரைக்குடி மெ. மெ. மெய்யப்ப செட்டியார், நேமத்தான்பட்டி மு.பெ.காசி செட்டியார், கோட்டையூர் க.வீ.சொ.அழகப்ப ஐயா ஆகியவர்களால் திருப்பணி செய்யப்பெற்றுள்ளது.

**152. திருவெண்ணியூர் - வெண்ணிக்கரும்பர் - அழகியநாயகி**

தேவகோட்டை மெ.சித.வயி.இராமநாதன் செட்டியாரால் ரூ. 70,000 செலவில் புதிதாகத் திருப்பணி செய்யப்பெற்று, ஜனவரி 1899ல் கும்பாபிஷேகமும், பின் அவர் மகன் வைரவன் செட்டியாரால் திருப்பணி செய்யப்பெற்று 24.08.1923 இரண்டாம் கும்பாபிஷேகமும் செய்யப்பெற்றன.

**153. திருப்பூவனூர் - புஷ்பவனநாதர் - கற்பகவல்லி**

காரைக்குடி பனை.மெ.மெ.பழனியப்ப செட்டியரால் ரூ.20,000 செலவில் நந்தவனம், பசுமடம், அந்தணர் உறையுள் முதலியன அமைக்கப்பட்டது.

**154. திருப்பாதாளேச்சுரம் - நாகநாதர் - அமிர்நாயகி**

ஒக்கூர் சி.கரு.சி.லெ.இலக்குமணன் செட்டியாரால் ரூ. 3,00,000 செலவில் திருப்பணி செய்யப்பெற்று 15.09.1935 கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது.

**155. திருக்களர் - களர்முளைநாதேசுவரர் - அழகேசுவரியம்மை**

கோவிலூர் வீர சேகரஞான தேசிகர் பெருமுயற்சியால் நகரத்தார் பெருளுதவியால் ரூ.3,50,000 செலவில் திருப்பணி செய்யப்பெற்று, 04.05.1911ல் முதல் கும்பாபிஷேகமும், ஸ்ரீ மகாதேச ஞானதேசிகர், கோட்டையூர் க.வீ.சொ. அழகப்ப செட்டியார் 12.06.1933ல் இரண்டாம் கும்பாபிஷேகமும செய்யப்பெற்றன.

**156. திருவுசாத்தானம் - மந்திரபுரீசுவரர் - பெரியநாயகியம்மை**

இத்தலத்தில் உள்ள அம்மன் கோயில் கொத்தமங்கலம் அழ.அரு.காசிச் செட்டியாரால் திருப்பணி செய்யப்பெற்றது.

**157. திருத்தண்டலை நீணெறி – நீணெறிநாதேசுவரர் - ஞானாம்பிகை**

தேவகோட்டை ராம. அரு.அரு.அருணாசலம் செட்டியாரால் ரூ.1,00,000 செலவில் திருப்பணி செய்யப்பெற்று, 04.02.1900ல் கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது.

**158. திருவெண்டுறை (திருவண்டுதுறை) – வெண்டுறைநாதேசுவரர் - வேனெடுங்கண்ணியம்மை**

தேவகோட்டை மெ. குடும்பத்தாராலும், ராம.அரு.அரு. சோமசுந்தரம் செட்டியாராலும் ரூ.1,00,000 செலவில் திருப்பணி செய்யப்பெற்று 6.7.1914ல் கும்பாபிஷேகம் செய்ய பெற்றது.

**159. திருக்கொள்ளம்புதூர் - வில்வவனேசுவரர் - சவுந்தராம்பிகை**

நற்சாந்துப்பட்டி பெ.ராம.இராமன் செட்டியாரால் ரூ.6,00,000 செலவில் திருப்பணி செய்யப்பெற்று, இவர் மகன் இராமநாதன் செட்டியார், இலக்குமணன் செட்டியாா, சிதம்பரம் செட்டியார் ஆகியோரால் 27.06.1937ல் ரூ.40,000 செலவில் கும்பாபிஷேகம் செய்யப் பெற்றது.

**160. திருப்பேரெயில் - சக்தீசுவரர் - சகந்நாயகி**

காரைக்குடி அ.ராம.கதி. இராமசாமி செட்டியாரால் திருப்பணி செய்யப்பெற்று, 06.04.1938ல் கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது.

**161. திருக்கொள்ளிக்காடு – அக்கினீசுவரர் - பஞ்சினு மெல்லடியம்மை**

தேவகோட்டை மெ. குடும்பத்தாரால் ரூ.50,000 செலவில் திருப்பணி செய்யப் பெற்று 1890ல் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது.

**162. திருத்தெங்கூர் - வெள்ளிமலை நாதேசுவரர் - பெரியநாயகியம்மை**

கண்டனூர் பெ.அழ. வீரப்ப செட்டியாரால் ரூ.2,50,000 செலவில் புதிதாய்த் திருப்பணி செய்யப் பெற்று, 1.6.1911ல் கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது.

**163. திருநெல்லிக்கா - நெல்லிவனநாதேசுவரர் - மங்களநாயகியம்மை**

தேவகோட்டை வீர.ராம.சு. சொக்கலிங்கம செட்டியாரால் ரூ.70,000 செலவிலும், அழகாபுரி சு.பெரி.சு. சுப்பிரமணியன் செட்டியாரால் ரூ.8,000 செலவிலும் அரிமளம் பழ.வ. முத்தடைக்கப்ப செட்டியாரால் ரூ.16,000 செலவும் திருப்பணி செய்யப்பெற்று 1900ல் கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது.

**164. திருநாட்டியத்தான்குடி - மாணிக்கவண்ணர் - மலை மங்கை**

தேவகோட்டை, வெ.தெ. அண்ணாமலைச் செட்டியார், முத்தையாச் செட்டியார், இலக்குமணச் செட்டியார் ஆகியவர்களால் திருப்பணி செய்யப் பெற்று 23.5.1907ல் கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது.

**165. திருக்காறாயில் (திருக்காரை வாசல்) – கண்ணாயிரநாதேசுவரர் - கைலாய நாயகி**

தேவகோட்டை முத்து.கரு.அரு., முத்து.க.மா., முத்து க.அ.லெ., குடும்பத்தினரால் திருப்பணி செய்யப் பெற்று 23.1.1918ல் முதல் கும்பாபிஷேகமும், 11.2.1951ல் இரண்டாவது கும்பாபிஷேகமும் செய்யப்பெற்றன.

**166. திருமறைக்காடு (வேதாரண்யம்) – மறைக்காட்டீசுவரர் - யாழைப்பழித்த மொழியம்மை**

ஒக்கூர் வீர.ராம.நா.ராம. இராமநாதன் செட்டியாரால் ரூ.70,000 செலவில் திருப்பணி செய்யப் பெற்றுள்ளது.

**167. திரு அகத்தியான்பள்ளி - அகத்தீசுவரர் - பாகம் பிரியாநாயகி**

தேவகோட்டை மெ.அரு.நா. இராமநாதன் செட்டியார், மெ.அரு.அரு.அருணாசலம் செட்டியார் இவர்களால் ரூ.2,00,000 செலவில் திருப்பணியும், ராம.அரு.அரு. செட்டியாரால் ரூ.7,000 உள்பட பழ.சோம. செட்டியாரால் ரூ.37,000 செலவில் திருப்பணியும், 6.7.1933ல் கும்பாபிஷேகமும், ரூ.15,000 செலவில் 8.7.1934ல் இரண்டாம் கும்பாபிஷேகமும் செய்யப்பெற்றன.

**168. திருஆலவாய் (மதுரை) - சொக்கலிங்கப் பெருமான் - மீனாட்சியம்மன்**

அமராவதிப்புதூர் வயிநாகரம் நாகப்பையா, வேங்கடாசல ஐயா, அண்ணாமலைச் செட்டியார், முத்தையா செட்டியார் என்ற சுப்பிரமணியன் செட்டியார் இவர்களால், சுவாமி கோயில் முதல் பிரகாரம், இரண்டாம் பிரகாரம தளவரிசைகள், ஆடி வீதித் தளவரிசை, சுவாமி – அம்மன் தங்க விமானம், தங்கம், வெள்ளி, வாகனங்கள், திருவாபரணங்கள், பல மண்டபங்கள், அம்மன்

தேர் முதலியன அமைக்கப் பெற்றும், மொட்டைக் கோபுரம் முழுக்கோபுரமாக அமைக்கப் பெற்று, 6.2.1878 பின் 1.7.1923 ல் கும்பாபிஷேகம் செய்யப் பெற்றது. இக்கோயிலுக்கு வயிநாகரம் குடும்பத்தார் ரூ.25,00,000 செலவிட்டிருக்கின்றனர்.

**169. திருஆப்பனூர் - ஆப்பனூரீசுவரர் - குரவங்கமழ் குழலம்மை**

அமராவதிப்புதூர் வயிநாகரம் நாகப்ப ஐயா, வேங்கடாசல ஐயா இவர்களால் ரூ.37,000 செலவில் திருப்பணி செய்யப்பெற்று 19.8.1881ல் கும்பாபிஷேகமும், 27.6.1918ல் இரண்டாம் கும்பாபிஷேகமும் செய்யப்பட்டது.

**170. திருப்பரங்குன்றம் - பரங்கிரிநாதர் - ஆவுடைநாயகி**

இத்தலத்தில் உள்ள சிவாலயம் வயிநாகரம் நாகப்ப ஐயா, வேங்கடாசல ஐயா, இவர்கள் குடும்பத்தினரால் திருப்பணி செய்யப் பெற்று 30.1.1893ல் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது.

**171. திருஏடகம் - ஏடகநாதேசுவரர் - நறுங்குழல் நாயகி ஏலவார் குழலி**

தேவகோட்டை உ.ராம.மெ.சு.பெரிய சேவுகன் செட்டியார், சின்னச் சேவுகன் செட்டியார், மெய்யப்ப செட்டியார் இவர்களால் ரூ.7,00,000 செலவில் திருப்பணி செய்யப்பெற்று 8.6.1930ல் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது.

**172. திருப்புத்தூர் - புத்தூரீசுவரர் - சிவகாமியம்மை**

இத்தல அம்மன் கோயில் அமராவதிப்புதூர் வயிநாகரம் குடும்பத்தினர், பள்ளத்தூர் க.ப. குமரப்ப செட்டியார், கண்டவராயன் பட்டி பழ.கரு. குடும்பத்தினர் ஆகியவர்களால் ரூ.1,00,000 செலவில் திருப்பணி செய்யப்பெற்று 8.2.1901ல் கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது.

**173. திருப்புனவாயில் - பழம்பதிநாதேசுவரர் - கருணை நாயகியம்மை**

தேவகோட்டை அழ.சுப.பழ. குடும்பத்தினரால் ரூ.1,60,000 செலவில் திருப்பணி செய்யப்பெற்று, 31.5.1903ல் கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது.

**174. திருஇராமேச்சுவரம் - இராமநாதேசுவரர் - பருவதவர்த்தினி**

தேவகோட்டை அழ.அரு. குடும்பத்தினரால் திருப்பணி செய்யப்பட்டு, கும்பாபிஷேகம் நடைபெற்றது.

**175. திருவாடானை - ஆதிரத்தினேசுவரர் - சினேகவல்லி**

தேவகோட்டை இராம.அரு.அரு. அருணாசலம் செட்டியாரால் ரூ.2,30,000 செலவில் திருப்பணி செய்து 20.5.1900ல் முதல் கும்பாபிஷேகமும்,

ராம.அரு.அரு.ராம. அருணாசலம் செட்டியாரால் ரூ.8,00,000 செலவில் திருப்பணி செய்யப்பெற்று இரண்டாம் கும்பாபிஷேகமும் செய்யப்பட்டது.

**176. திருக்கானப்பேர் (காளையார் கோவில்) – காளையீசுவரர், சுந்தரேசுவரர், சோமமேசுவரர் - சொர்ணவல்லி, மீனாட்சி, சவுந்திரநாயகி**

இத்தலத்தில் உள்ள சோமேசுவரர் கோயில் அமராவதிப்புதூர் வயிநாகரம் வேங்கடாசலம் செட்டியார் ரூ.1,00,000 செலவில் திருப்பணி செய்து 21.1.1886ல் கும்பாபிஷேகம் செய்தனர். காளையீசுவரர் கோயில் தேவகோட்டை ஜமீந்தார் அழ.அரு.இராமசாமிச் செட்டியாரால் ரூ.2,50,000 செலவில் திருப்பணி செய்தும், சொர்ணவல்லியம்மை கோயில் தேவகோட்டை தி.ராம.தி.இ. குடும்பத்தினரால் ரூ.75,000 செலவில் திருப்பணி செய்து 22.1.1900ல் கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது. சவுந்தரநாயகியம்மை கோயில் ஒக்கூர் சி.கரு.ஆ.கண்ணப்ப செட்டியாரால் ரூ.50,000 செலவில் திருப்பணி செய்து 27.6.1910ல் கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது. தேவகோட்டை அழ.அரு.ராம. அருணாசலம் செட்டியாரால் ரூ.1,50,000 செலவில் தெப்போற்சவ மண்டபம், சொக்கட்டான் மண்டபம் முதலியன நிறுவப்பட்டது.

**177. திருப்பூவணம் - பூவணநாதேசுவரர் - மின்னனையாளம்மை**

தேவகோட்டை உ.ராம.உ.மு. செட்டியாரால் ரூ.4,50,000 செலவில் திருப்பணி செய்து, 4.2.1900ல் கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது.

**178. திருச்சுழியல் - திருமேனி நாதர் - துணைமாலை நாயகி**

தேவகோட்டை தி.அ.சு. அண்ணாமலைச் செட்டியாரால் திருப்பணி செய்யப் பெற்று 23.1.1918ல் கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது.

**179. திருக்குற்றாலம் - குற்றாலநாதர் - குழல்வாய் மொழியம்மை**

இத்தல அம்மன் கோயில், தேவகோட்டை வி.கரு.சித.சோம. அவர் மகன் கா.இ பி.ச.அரு. இவர்களால் ரூ.2,00,000 செலவில் திருப்பணி செய்து, கும்பாபிஷேகம் செய்யப் பெற்றது.

**180. திருநெல்வேலி - நெல்லையப்பர் - காந்திமதியம்மை**

கண்டனூர் நா.பெ. செட்டியாரால் ரூ.1,00,000 செலவில் அன்னசத்திரமும், தேவகோட்டை வி.கரு.சித. செட்டியாரால் திருநந்தவனம், குருபூஜை மடம், துவாதசி மடம், பசுமடம் முதலியன நிறுவப்பட்டது.

**181. திருப்பாண்டிக்கொடுமுடி - கொடுமுடி நாதர் - பண்மொழி நாயகி**

இத்தல சிவன் கோயிலும், வீரநாராயண பெருமாள் கோயிலும் தேவகோட்டை அழ.அரு. அருணாசலம் செட்டியார், கானாடுகாத்தான் சா.அ. இராமசாமிச் செட்டியார், க.வெ. சிதம்பரம் செட்டியார், க.வெ.ராம. வேங்கடாசலம் செட்டியார் இவர்களால் ரூ.3,00,000 செலவில் திருப்பணியும், 16.4.1909ல் கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது.

**182. திருக்கருவூர் (கரூர்) - பசுபதீசுவரர் - கிருபா நாயகி, சௌந்தர்ய நாயகி**

கானாடுகாத்தான் சா.ராம. முத்தையா செட்டியார், இவர் மகன் சிதம்பரம் செட்டியார், இராமசாமி செட்டியார், அண்ணாமலைச் செட்டியார், பெத்தாச்சி செட்டியார் இவர்களால் ரூ.3,50,000 செலவில் திருப்பணியும், 11.7.1906ல் கும்பாபிஷேகமும் செய்யப்பெற்றது.

**183. திருமுருகன் பூண்டி - முருகநாதேசுவரர் - முயங்குபூண்முலையம்மை**

திருப்பூர் நகரத்தார்களால் நந்தவனம் நிறுவப்பெற்றுள்ளது.

**184. திருநணா (பவானி) - சண்முகநாதேசுவரர் - வேதாம்பிகை**

தேவகோட்டை, பழ.ப. தேவராசன் செட்டியாரால் திருநந்தவனம் அமைக்கப்பட்டுள்ளது.

**185. திருநெல்வாயிலரத்துறை - அரத்துறை நாதர் - ஆனந்த நாயகி**

தேவகோட்டை ராம.அரு.அரு.ராம. அருணாசலம் செட்டியாரால் ரூ.15,000 செலவில் திருப்பணி செய்யப்பட்டது.

**186. கூடலையாற்றூர் - நர்த்தன வல்லபேசுவரர் - பராசக்தி, ஞானசக்தி**

தேவகோட்டை ராம.அரு.அரு. அருணாசலம் செட்டியாரால் ரூ.80,000 செலவில் திருப்பணி செய்யப்பட்டு 30.1.1891ல் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது.

**187. திருவதிகை - வீரட்டேசுவரர் - திரிபுரசுந்தரி**

தேவகோட்டை மெ. வகையினரால் திருப்பணிகளும், ராம.அரு.அரு. அருணாசலம் செட்டியாரால் ரூ.20,000 செலவில் திருப்பணி செய்யப்பட்டது.

**188. திருநாவலூர் - திருநாவலேசுவரர் - சுந்தர நாயகி**

தேவகோட்டை மெ. வகையினரால் திருப்பணிகளும், ராம.அரு.அரு. அருணாசலம் செட்டியாரால் ரூ.20,000 செலவில் திருப்பணி செய்யப்பட்டது.

**189. திருமுதுகுன்றம் (விருத்தாசலம்) – பழமலைநாதர் - பெரிய நாயகி**

அமராவதிபுதூர் வயிநாகரம் வேங்கடாசலம் செட்டியார், அவர் மகன் வே.இராமநாதன் செட்டியார், அ. இராமநாதன் செட்டியார் அவர் தம்பி வேங்கடாசலம் செட்டியார் ஆகியவர்களாலும், நகரத்தார் பொருளுதவி கொண்டு ரூ.6,00,000 செலவில் திருப்பணியும் செய்யப்பெற்று, 4.5.1911ல் கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது.

**190. திருக்கோவலூர் - வீரட்டேசுவரர் - சிவானந்தவல்லி**

தேவகோட்டை மெ.சித.வயி.இராம. சிதம்பரம் செட்டியாரால் ரூ.1,50,000 செலவில் திருப்பணி செய்யப்பட்டு அவர் சகோதரர் வைரவன் செட்டியாரால் 25.1.1912ல் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது.

**191. திருவெண்ணெய் நல்லூர் - கிருபாபதீசுவரர் - மங்களாம்பிகை**

தேவகோட்டை வீர.ராம.அரு. அருணாசலம் செட்டியாரால் நகரத்தார் பலரிடமிருந்து பொருளுதவி பெற்றுத் திருப்பணி செய்தும், அம்மன் கோயில் இராம.அரு.அரு. குடும்பத்தாரால் ரூ.25,000 செலவில் திருப்பணி செய்யப்பெற்றும், ஜுன் 1906ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது.

**192. திருத்துறையூர் - பசுபதீசுவரர் - பூங்கோதை**

தேவகோட்டை மு.ராம. நடேசன் செட்டியாரால் திருப்பணி செய்யப்பட்டது.

**193. திருப்பாதிரிப்புலியூர் (கடலூர்) – பாடலேசுவரர் - பெரியநாயகி**

இத்தல சிவாலயம், கடியாபட்டி தீ.சொ. முருகப்ப செட்டியார், தீ.நா. முத்தையா செட்டியார், தீ.அ. சிதம்பரம் செட்டியார் ஆகியவர்களால் ரூ.12,00,000 செலவில் திருப்பணிகளும், ரூ.1,00,000 செலவில் 6.3.1908ல் முதல் கும்பாபிஷேகமும், 28.6.1917ல் இரண்டாம் கும்பாபிஷேகமும் செய்யப்பட்டது.

**194. திருக்கழுக்குன்றம் - வேதகிரீசுவரர் - பெண்ணில் நல்லாளம்மை**

காரைக்குடி நா.லெ.நா. நாராயணன் செட்டியார், சண்முகநாதபுரம் செ.ராம.ராம.இராமசாமிச் செட்டியார் இவர்களால் ரூ.1,00,000 செலவில் திருப்பணி செய்யப்பட்டது.

**195. திருக்கச்சி ஏகம்பம் (காஞ்சிபுரம்) – ஏகாம்பர நாதர் - காமாக்ஷியம்மை**

தேவகோட்டை மெ.ராம.அ. முத்தையா செட்டியார், ராம.மெ. இலக்குமணன் செட்டியார் இவர்களால் ரூ.20,00,000 செலவில் திருப்பணி செய்து 4.2.1900ல் முதல் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. கண்டனூர் வயி.இராம. செட்டியாரால் ரூ.70,000 செலவில் சில திருப்பணி செய்யப்பெற்று 1922ல் இரண்டாவது கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது.

**196. திருக்கச்சி நெறிக்காரைக்காடு – காரைத்திருநாதேசுவரர் - காமாட்சியம்மை**

தேவகோட்டை ராம.மெ. மெய்யப்ப செட்டியாரால் ரூ.70,000 செலவில் திருப்பணி செய்து 3.2.1920ல் கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது.

**197. திருவோத்தூர் - வேதநாதேசுவரர் - இளமுலைநாயகி**

தேவகோட்டை மெ.அரு.நா. இராமநாதன் செட்டியாரால் ரூ.10,000 செலவில் குருபூசை மடம் நிறுப் பெற்றுள்ளது.

**198. வன்பார்த்தான் பனங்காட்டூர் - தாளபுரீசர், கிருபாநாதேசுவரர் - அமிர்தவல்லியம்மை, கிருபாநாயகி**

தேவகோட்டை பொ.எ.சொ. மாணிக்கம் செட்டியார், பழநியப்ப செட்டியார் இவர்களால் ரூ.2,00,000 செலவில் திருப்பணி செய்து 5.7.1928ல் கும்பாபிஷேகம் செய்யப் பெற்றது.

**199. திருவண்ணாமலை - அருணாசலேசுவரர் - உண்ணமுலையம்மை**

- கோட்டையூர் அ.க.குடும்பத்தாராலும் நகரத்தார் பொருளுதவி கொண்டும், சுவாமி, அம்மன் கோயில்கள், விநாயகர் முதலிய பரிவார தேவர் கோயில்கள், அணியொட்டிக் கால்கள் அமைந்த பிரகாரங்கள், கொடிமர மண்டபங்கள், துர்க்கையம்மன் கோயில், கொலு மண்டபம் முதலியன ரூ.12,35,000 செலவில் திருப்பணி செய்யப் பெற்றுள்ளது.
- கடியாபட்டி தீ.சொ.நா., தீ.அ. குடும்பத்தாரால் ரூ.50,000 செலவில் இராஜமண்டபம் செய்வித்தனர்.
- கானாடுகாத்தான் இராஜா.ஸர். அண்ணாமலைச் செட்டியாரால் ரூ.75,000 செலவில் பிரம்ம தீர்த்தக் குளமும் அமைத்தனர்.
- கோட்டையூர் க.வீ.அழ. குடும்பத்தாரால் ரூ.1,75,000 செலவில் சிவகங்கைத் திருக்குளமும், திருநந்தவனமும் அமைத்தனர்.
- கோட்டையூர் அ.க.அ.மெ. குடும்பத்தாரால் ரூ.20,000 செலவில் பிரகாரத்தளவரிசை அமைத்துள்ளனர்.
- கோட்டையூர் அ.க.அ.சித.வெ. நடேசன் செட்டியாரால் ரூ.5,000 செலவில் தளவரிசை அமைத்துள்ளனர்.
- கோட்டையூர் ராம.பெ. நாராயணன் செட்டியாரால் ரூ.35,000 செலவில் தாமிரத் தகடு வேய்ந்த கல்யாண மண்டபம் அமைக்கப் பெற்றுள்ளன.
- நகரத்தார்களால் 12.6.1903ல் கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது.

- ரூ.4,12,500 செலவில்

  கோட்டையூர் பெ.க.அ.சித.வீரப்ப செட்டியார் அவர் சகோதரி வள்ளியம்மை ஆச்சி

  காரைக்குடி முத்து.அரு. கோட்டையூர் அ.க.அ.மெ.வ.இ

  இராமச்சந்திரபுரம் தீ.சொ.ராம., தீ.நா.மு.தீ.அ.சா.

  கானாடுகாத்தான் சா.ராம.மு.ராம.இராமசாமிச் செட்டியார் ராஜா.ஸர்.அண்ணாமலைச் செட்டியார்

  கோட்டையூர் அ.க.ராம.அரு. அருணாசல் செட்டியார்

  ஆகியவர்கள் வெள்ளி, இந்திர விமானங்கள், வெள்ளிக் காமதேனு, கற்பக விருட்ச வாகனங்கள், வெள்ளி ரிஷப வானங்கள், வெள்ளித்தேர், மரத்தேர்கள், முதலியன செய்யப் பெற்றுள்ளன.

- ரூ.2,53,000 செலவில்

  கோட்டையூர் க.வீ.அழ. குடும்பத்தார்

  பெ.க.அ.சித.வீரப்ப செட்டியார்

  அ.க.ராம.மெ.சித.சிதம்பரம் செட்டியார்

  அ.க.அ.மெ.வேங்கடாசலம் செட்டியார்

  ராம.அழ.சிதம்பரம் செட்டியார், அ.க.அ.சிதம்பரம் செட்டியார்

  கானாடுகாத்தான் வெ.சா. அண்ணாமலைச் செட்டியார்

  சா.அ.அண்ணாமலை செட்டியார், அ.க.அ.சித.வெ.நடேசன் செட்டியார்

  வெ.வீர.வெ.அரு. நாகப்பச் செட்டியார்

  கொத்தமங்கலம் ராம.அரு.வெ.பெத்தாச்சி செட்டியார்

  சி.அ.சி.ராம. இராமன் செட்டியார்

  சி.அ.சி.அரு. வள்ளியம்மை ஆச்சி

  அரிமளம் செ.சித.முத்துச் செல்லப்ப செட்டியார்

  பள்ளத்தூர் ந.பெ. பெத்தபெருமாள் செட்டியார்

  தேவகோட்டை எ.பெரி.கரு. சித. சிதம்பரம் செட்டியார்

  நா.க.அ.நா. பழநியப்ப செட்டியார், மகன் கண்ணப்ப செட்டியார்

  நா.க.அ.பழ.இ இராமச்சந்திரபுரம் து.நா.முத்தையா செட்டியார்

  நற்சாந்துபட்டி வீ.மு.வீரப்ப செட்டியார்

  ஆகியவர்கள் நவமணிகள் இழைக்கப்பெற்ற திருவாபரணங்கள், மணிமுடிகள், தங்கக் கவசங்கள், வெள்ளிக் கவசங்கள், பாத்திரங்கள், வெள்ளியால் உபசாரப் பொருள்கள் முதலியன அமைக்கப் பெற்றுள்ளன.

**அணி அண்ணாமலை** – கோட்டையூர் அ.க.அ.மெ. குடும்பத்தார், ராம.பெ., இவர்களால் ரூ.5,000 செலவில் அம்மனுக்கு வெள்ளிக் கவசம் செய்தனர்.

- ரூ.10,000 செலவில் அலுவலர் உறையுளும்
- ரூ.50,000 மூலதனத்தில் கோயிலுக்கு நித்தியக் கட்டளைகள் அமைக்கப்பெற்று ரூ.3,50,000 செலவில் திருப்பணி செய்யப்பெற்று, 27.1.1918ல் கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது.

**200. திருமாற்பேறு - மால்வணங்கீசுவரர் - கருணை நாயகி**

தேவகோட்டை அழ.வீர.சித. இலக்குமணன் செட்டியார், வீரப்ப செட்டியார், இராமநாதன் செட்டியார் ஆகியவர்களாலும், நகரத்தார் பொருளுதவி கொண்டு திருப்பணி செய்து 28.6.1937ல் கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது.

**201. திருஇலம்பையங்கோட்டூர் - சந்திரசேகரேசுவரர் - கோடேந்து முலையம்மை**

தேவகோட்டை நகரத்தார் சிலரால் ரூ.10,000 செலவில் திருப்பணி செய்யப்பெற்றுள்ளன.

**202. திருவிற்கோலம் - திரிபுராந்தகேசுவரர் - திரிபுராந்தகியம்மை**

தேவகோட்டை ராம.பெரி. பிச்சப்ப செட்டியாராலும், நகரத்தார் பொருளுதவி கொண்டு ரூ.2,00,000 செலவில் திருப்பணி செய்து 29.4.1914ல் முதல் கும்பாபிஷேகமும், 11.7.1972ல் இரண்டாவது கும்பாபிஷேகமும் செய்யப்பெற்றன.

**203. திருவாலங்காடு - தேவர் சிங்கப்பெருமான் - வண்டார் குழலியம்மை**

கோட்டையூர் பெ.மு.அ. செட்டியாரால் சுவாமி கோயில், நடராசர் கோயில் முதலியன புதிதாகக் கட்டப்பெற்றுக் கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது.

**204. திருவெண்பாக்கம் (திருவுளம்புதூர்)**

தேவகோட்டை நகரத்தார்களால் சுவாமி கோயில், அம்மன் கோயில் மண்டபங்கள் கட்டப்பெற்று கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது.

**205. திருக்கள்ளில் - சிவானந்தேசுவரர் - ஆனந்தவல்லியம்மை**

தேவகோட்டை ராம.அரு.அரு. சத்திரம் அருணாசல் செட்டியார் அவர்களிடம் பணியாற்றிய தேனப்ப செட்டியார் முயற்சியால் ரூ.15,000 செலவில் 1900ல் திருப்பணி செய்யப்பெற்றுள்ளது.

**206. திருக்காளத்தி - காளத்தீசுவரர் - ஞானப் பூங்கோதை**

தேவகோட்டை மெ.அரு.நா. இராமநாதன் செட்டியார், மெ.அரு.அரு. அருணாசலம் செட்டியாார் இவர்களால் எல்லாக் கோயில்களும் புதுப்பிக்கப் பெற்றும், அணியொட்டிக் கால்மண்டபம், கொலுமண்டபம், நிறுவப்பெற்றும் ரூ.10,00,000 செலவில் திருப்பணி செய்யப்பெற்று 21.4.1912ல் கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது.

**207. திருவொற்றியூர் - படம்பக்கநாதர் - வடிவுடையம்மை**

அமராவதி புதூர் வயிநாகரம் அண்ணாமலைச் செட்டியாரால் திருப்பணி செய்யப்பெற்று, 14.1.1870ல் கும்பாபிஷேகம் செய்யப் பெற்றது.

**208. திருவலிதாயம் (பாடி) - வலிதாயநாதர் - தாயம்மை**

தேவகோட்டை பழ.சு.அரு.ச. சபாபதி செட்டியாரால் திருப்பணி செய்யப்பெற்றுக் கும்பாபிஷேகம்மி செய்யப்பெற்றது.

**209. திருவான்மியூர் - மருந்தீசுவரர் - சொக்கநாயகி**

தேவகோட்டை முரு.கி.ராம.இராமன் செட்டியாரால் நகரத்தார் பொருளுதவி கொண்டு திருப்பணி செய்யப்பெற்று 10.6.1913ல் கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது.

**210. திருவிடைச்சுரம் - ஞானபுரீசுவரர் - இமயமடக்கொடியம்மை**

வயிநாகரம் நாராயணன் செட்டியார் மற்றும் தேவகோட்டை நகரத்தார் பொருளுதவி கொண்டு ராம.அரு.அரு.ராம. அருணாசலம் செட்டியாரால் திருப்பணி செய்யப்பெற்றுக் கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது.

- **COURTESY**

- **நகரத்தார் சங்கம், திருச்சிராப்பள்ளி**